உ

கணபதி துணை.

தமிழறியும்பெருமாள் கதை.

இஃது

சண்முகசுவாமியவர்களால்
பார்வையிடப்பட்டு,

புதுவை
இராமசாமிமுதலியாரால்

ஸ்ரீ-சுப்பராயதேசிகரவர்களது
கல்விப்பிரவாகவச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

இவ்வச்சுக்கூடத்துத்தலைவர்
திரு-பச்சையப்பெருமாள்நாயகர்.

ரௌத்திரி௵ ஐப்பசிமீ.

உ

சிவமயம்.

ஔவையடக்கம்.

(விருத்தம்.)

பொன்னவகருமவகேசன்புதல்விகற்புக்... *
கினிதுபோயுறையூர்மேவி ... . *
கன்னியாய்த்தமிழறிவாளென்னு நாமங் ... *
கலைவாணனுடன் பிரிதிக்கனேயபண்ணி *
தன்னையூசன்மயலாக்குமடையனுன...... *
தனிவிறகுதலையனுக்குத்தாரமாகி ... *
இன்னிலத்தில்வாழ்ந்தகதையுரைக்கவேண்டி.
யிபமுகத்து ஐங்கரன்றாளிணையதாமே. *



உ

24 JUN 1901

சிவமயம்

தமிழறியும்பெருமாள்கதை.

காப்பு.

(வெண்பா.)

சண்பகமேவீசுந்தமிழறிவாடன்பேரிற் ...*
பண்புடனேசெந்தமிழைப்பாடுதற்கு, எண்
பவியில். வேலைவிழித்தெரித்தவித்தகனார்பெ
ற்றெடுத்த, காலை மதக்களிறேகாப்பு ..... *

அளகாபுரியென்றொருபட்டணமுண்டு அ திலே அளகேஸ்வரனென்றொரு இராஜா இராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தான் அவனுக்கு அலங்குழலாளென்றொருகுமாரத்திபிறந்தாள்- அவள் பன்னிரண்டுவயதிலே சகலகலையுங்கற்றும்வெகுரூபலாவண்ணியசவுந்தரியாயிருந்தசெல்வவதியாகிப் பன்னிரண்டுநிலையுப்பரிகையின்மேலிருந்துகொண்டுதன்னுடையதோழிமாருந்தானுமாகப்பந்துவிளையாடிக்கொண்டிருக்கும்போது மின்னையாருந்தேசத்திற்ப டலி புரமென்றொரு பட்டணமுண்டு அந்தப்பட்டணத்துக்கதிபதியானபத்திரகிரிஇராஜாவுக்குச் சந்தனகுமா

னென்றொருபிள்ளையுண்டு அவனைப்பள்ளிக்கூடவைத்துவித்தைபடிப்பிக்கிறநாளையிலேவித்லைதமனதிலேதரியாமல்மூடனாகச்சிலநாளிருக்கையில்ஒருநாள்இராஜாவானவன் பிள்ளையைப்பார்த்துஇப்படிக்கொத்தகல்விபற்றமூடப்பிள்ளையிருந்தென்னபோயென்னவென்றுமனஞ்சலித்துக்கொண்டான் - அந்தப்பிள்ளையும்பார்த்துநமக்குஎழுத்துவாசனையில்லாதபடியினாலேயல்லவோ நம்முடைய தகப்பனார்கோபித்துக்கொண்டாரென்றுமனதுநிந்தாக்கிராந்தனாகப்புறப்பட்டுதேசாந்தரஞ்சுற்றித்திரிந்துதேசங்களுடையபுதுமைகளும்பார்த்து ஒருவருஷந்தேச சஞ்சாரம்பண்ணியதன்பிறகுஅளகாபுரிப்பட்டணத்தில் வந்து அந்தப்பட்டணத்துப் புதுமைகளையும் பார்த்துஇனியப்பாலேபோகவேண்டுமென்று புறப்பட்டுவரச்சே உப்பரிகை யோரமாய்ப் போகிறவன் உப்பரிகையையண்ணாந்துபார்த்தான்-அந்தஉப்பரிகையின்மேலேபூரணச்சந்திரனுதயமானதுபோலே பந்தடித்துக்கொண்டிருக்கிற இராஜகுமாரத்தியைக் கண்டான்அந்தஇராஜகுமாரத்தியும்பாலசூரியப்பிரகாசமான இராஜகுமாரனைக்கண்டாள் கண்டவுடனே இருவரும் ஒருவர்மீதிலொருவரிச்சையானார்கள்.

அப்போது ஒருவக்கொருவர் பேசக்
கூடாதபடியினாலே தனதுகாதினோலையைவா
ங்கிக்கைநகத்தாலெழுதியவிபரம்- இந்தப்ப
ட்டணத்துக்குமேலண்டையில் மண்றோட்ட
மென்றொருதிருவாசற்சாவடியிருக்கிறது அதி
லேபோயிரும்இராத்திரிக்குஉம்மண்டைக்கு
நான்வருகிறேனென்றெழுதி அந்தஓலையை
இந்தஇராஜகுமாரன்முன்புபோட்டாள்-அவ
னும் அந்தஓலையை யெடுத்துக்கொண்டு தன
க்கு எழுத்து வாசனை தெரியாத படியினா
லே ஆர் கையிலேயாகிலுங் கொடுத்து வா
சிக்கச்சொல்லுவோமென்று புறப்பட்டுத்தன்
னிச்சையாய் அந்தத்திருவாசற் சாவடியில்வந்
தான் அதிலேயொருகுஷ்டரோகியிருந்தான் அ
வனிடத்திற்போய்உமக்குஎழுத்துவாசனைதெ
ரியுமோவென்றுகேட்க-அவனும்எனக்கு எழு
த்துவாசனைதெரியுமென்றுசொன்னான், அந்த
ஓலையைக்கையிலேகொடுத்து வாசித்துச்சொ
ல்லுமென்றுசொன்னான் அந்தக்குஷ்டரோகி
யும் அந்த ஓலைக்குள்ளெழுதியிருந்தவிபரத்
தை மனதில்வைத்துக்கொண்டு அந்த இரா
ஜகுமாரத்தியைத்தான் அனுபவிக்கவேண்டு
மென்றுநினைத்துக்கொண்டு இந்தஇராஜகுமா
ரனுக்கு மாறுபாடாகச்சொன்னவிதம்ஓகோ
ய் இராஜாவே இந்த அநியாயமான பட்டண

த்துக்கு என்வந்தீர். நீரிந்தப்பட்டணத்துக்கு
ள்ளென்ன துடுக்குடனேயிருக்கிறீரோ தெரி
யாது இந்தப்பட்டணத்து இராசா உம்மைக்க
ண்டவிடத்திலே ஆக்கினைபண்ணச்சொல்லிகா
வலாளிகள் கையில் தனது முத்திரைமோதிரத்
தைக்கொடுத்திருக்கிறாராம். அவர்கள் உம்மை
த்தேடிக்கொண்டுதிரிகிறார்களாம் ஆனபடியி
னால் இராசகுமாரத்தி உம்மையிந்நேரமேபுற
ப்பட்டோடிப்போகச்சொல்லியெழுதியிருக்
கிறாளென்றுசொன்னான் அந்தவிசேஷத்தை
இராஜகுமாரன் கேட்டுஇது அநியாயமாயிருக்
கிறது நாமென்னபாவம்செய்தோமென்று
அவ்விடம் விட்டுப்புறப்பட்டுப் பயந்தோடி
ப்போனான் அதன்பிறகுகுஷ்டரோகியுமெழு
ந்திருந்து ஒருகிளிஞ்சில்லோட்டையெடுத்துக்
கொண்டுஇலுப்பைப்புண்ணாக்கும்மஞ்சளுமெ
டுத்துக்கொண்டுகுளக்கரைக்குப்போய் உட
ம்புகுளித்துஉடம்பிலேயிருக்கிறசொறிபோ
கும்படியாககிளிஞ்சில்லோட்டினாலே நன்றா
கச்சுரண்டிப்போட்டு இலுப்பைப்புண்ணாக்
கும்மஞ்சளும்போட்டுதேய்த்துக் குளித்து
நன்றாகச் சுத்திபண்ணிக்கொண்டு தன்னுடைய
கிழிந்த துணியைத்தப்பியுலர்த்திக்கொண்டுஇரு
ட்டினபிறகு அந்தச்சாவடியிலேவந்து ஒருமூ
லையிலேபடுத்துக்கொண்டிருந்தான்,

இராஜகுமாரத்தியும்அன்றிராத்திரி இராஜகுமாரனுக்குத்தான்சொன்ன அடையாளப்படிக்குஅவ்விடத்திற்றானேயிருப்பானென்றபாதிராத்திரிக்குப்பிற்பாடு அந்தஇராஜகுமாரனுக்குச்சாப்பாடுஅதற்கேற்றபதார்த்தங்களுங்கந்தகஸ்தூரிபரிமளாதிகளும்ஆடையாபரணங்களும், ஒருபெட்டியில்வைத்துக்கொண்டுபெட்டியைமூடிமுத்திரித்துஅந்தப்பெட்டியைஒருதாதிதலைமேற்றரிப்பித்துக்கொண்டுஉப்பரிகைக்குநாலேணிவிட்டிறங்கியொருவருமறியாமல்இருவரும்புறப்பட்டு அந்தத்திருவாசற்சாவடியிலேவந்துபார்க்குமளவில்மூலையிலேபடுத்துக்கொண்டிருக்கிறவனைக்கண்டுபகல்நாம்கண்டஇராஜகுமாரனென்றுஆசையாகியகாமாந்தகாரத்தினாலே ஓடிவந்துமூலையிலேயிருக்கிறகுஷ்டரோகியைக்கட்டிக்கொண்டாள்.

கட்டிக்கொண்டவுடனேஅவனுடம்புஇவளுடம்பிலேபட்டமாத்திரத்திற் சீழும்இரத்தமுங்கசப்படிக்கிறநாற்றமும் துணியெல்லாம்நனைந்துதண்ணீர்வடித்து அத்திப்பால்தோய்த்ததும்போலவும்உடம்பிலேயிருக்கிறசொரிகள்பலாக்காய்முள்ளைக்கிறதுபோலவும், இப்படியாயிருந்ததுகண்டுஇவள்சுகியானபடியினாலேயிந்தவேஷ்டைபொறுக்காமல் இவனைப

ல்நாம்கண்ட இராஜகுமாரனல்ல ஏதோ கப்பட
மாச்சுதென்று எங்கிசீவனை விட்டாள் - அதைக்
கூடவந்ததாதிகண்டு பயப்பட்டுக்கையுங்காலு
ம்நடுக்கமெடுத்துக்கொண்டு என்னசெய்யப்
போகிறோம் தெய்வமே இந்தசேதி இராஜா அ
றிந்தால் நீங்களிந்த நேரத்திலிங்கே வந்தகாரிய
மென்னவென்று நம்மை ஆக்கினை பண்ணுவா
ரென்று மிகவும்பயந்து பெட்டியிலே போட்
டுக்கொண்டுவந்த பதார்த்தங்களையெல்லாங்கு
ஷ்டரோகி முன்னே கொட்டிப்போட்டு அந்த
ப்பெட்டிக்குள்ளே பிணத்தை எடுத்துப்போ
ட்டுக்கட்டிக்கொண்டு பெட்டியைத்தலைமீதெ
டுத்துக்கொண்டு முன்புவந்தவழியே புறப்ப
ட்டு நாலேணிமேலேறி உப்பரிகைக்குள்ளே
போய்க்கட்டிலின்மீது பிணத்தைப் படுக்கவை
த்து அலறிக்கொண்டுபோய் இராஜாவுடனே சு
வாமீ என்னமோ தெரியாது இருந்தாப்போலி
ருந்து தங்கள் குமாரத்தி மரித்துப்போனாளெ
ன்று சொன்னாள், அந்த விசேஷங்கேட்டு இரா
ஜாவானவன் ஓடிவந்து பார்க்குமளவில் நிசமாக
மரித்திருப்பதைக்கண்டு என்னகாரணமோ வி
ஷந்தீண்டிற்றோ இல்லையென்று பேய்பசாசுக
ளறைந்ததோ என்றான் றுங்காணம்போகாதெ
ன்று வெகுவாய்த்துக்கித்துக்கொண்டு பொழு
து விடிந்ததும் பிற்பாடு பெண்ணைத்தகனம்பண்ணி

வைத்து செய்யுங்கடனெல்லாஞ்செய்துமுடித்து அதன்பிறகும்பின்னையுஞ்சிலநாளைக்குப்பிற்பாடுமுன்னாலே பயந்தோடிப்போன இராஜகுமாரன் இந்த இராஜகுமாரத்தி இறந்துபோனவிசேஷங்கேள்விப்பட்டு அவனுக்கப்போதுநினைவுவந்துநமக்காகமரித்தவள்போலேயிருக்கிறது குஷ்டரோகிமோசம்பண்ணிப்பயமுறுத்தினதை நானறியாமலோடிப்போனேனேயென்றுமிகவும்விசாரப்பட்டு அந்தப்பட்டணமேவந்துஅன்றிராத்திரிசாவடியிற்போய்விஷத்தைவாங்கிக்கொண்டுசெத்தான்பொழுதுவிடிந்தபிற்பாடு அங்கேயிருக்கிறபேர்செத்திருப்பவனைக்கண்டு ஆரோபரதேசிசெத்துப்போனானென்று மசானத்திற்கட்டைகள்கொண்டுபோயப்போட்டு அந்தக்கன்னிகையைத்தகனம்பண்ணினவிடத்திலே இவனையுமெடுத்துப் போய்த்தகனம் பண்ணிப்போட்டார்கள்.

பிற்பாடிந்த இரண்டுஆவேசமும்அந்தச்சாவடியிலேதங்கள்தங்களிச்சையாய் ஒன்றோடொன்றுசேராமல்ஆணாவேசமொருமூலையிலிருக்கும்பெண்ணாவேசமானது அந்தச்சாவடியிலேஒருத்தரையுஞ்சேரவொட்டாமல்பயமுறுத்திக்கொண்டிருக்கும், ஆனபடியினாலே ஒருவரும்அந்தச்சாவடியிலேவந்துசேரார்கள்

இப்படி ஒருவருஷகாலமாக இதிலே சஞ்சரித்து
க்கொண்டிருக்கிறபோது அதற்குப்பிற்பாடு
ஔவையார் எங்கேயோ போயிருந்து தன்னி
ருப்பிடத்திற்குப்போகவேண்டி வருகிறபோ
து அந்தப்பட்டணத்துக்குவந்தாள், வந்தபோ
து சாயங்காலமாச்சுது இன்றைக்கிங்கேயிராத்
திதங்கிப்போவோமென்று நினைத்து அவிடத்தி
லிருந்தபேரைப் பார்த்து அப்பா படுத்துக்
கொள்ள இடங்கிடைக்குமோவென்று கேட்டா
ள், அதற்கு அவர்கள் சொன்னது இந்தப் பட்ட
ணத்துக்குமேலண்டையாக ஒரு திருவாசற்சா
வடியிருக்கிறது. அதிலே வேண்டிய பேர் படுத்
துக்கொள்ளலாம், ஆனால் அதிலே ஒரு பசா
சிருந்துகொண்டு அதிலே வந்தவர்களையெல்
லாம் அறைந்துபோடுகிறது, ஆகையினாலே ஒ
ருவரும் அதிலே சேரப்பயப்படுகிறார்களம்
மாவென்று சொன்னார்கள், ஔவையாரானவ
ள் இந்த விசேஷங்கேட்டுப் பேயைப் பேயடிக்
கப்போகிறதோவென்று வந்து படுத்துக்கொ
ண்டாள், அந்நேரம் அந்த ஆவேசம் அங்கேயி
ராமல் வெளியிற்போயிருந்தது ஔவையார் ப
டுத்துக்கொண்டிருக்கிறதைக்கண்டு மிகவும் ஆ
ங்காரத்துடனே பெற்றெற்றென்று அறைய
வருகிறதைக்கண்டு ஔவையாரும் அநந்தல் நீங்
கிவிழித்துப்பார்த்து அருளிச்செய்தது,

(வெண்பா.)

வெண்பாவிருகாலிற் கல்லானை வெள்ளோலைக்
கண்பார்த்துக்கையாலெழுதானைப்-பெண்பா
வி, பெற்றாளோபெற்றாள்பிறர்நகைக்கப்பெ
ற்றாளென், றெற்றோமற்றெற்றோமற்றெற்று

என்றுசொல்லக்கேட்டு அந்தஆவேசங்கல்விகற்றபேயானபடியினாலே இந்தக்கல்வியின்பொருளையறிந்துகொண்டுநம்முடையபூர்வோத்திரமெல்லாமறிந்துசொன்னாள், இவள்தேவியேசரி என்று இவளையொன்றுஞ்செய்யப்போகாதென்று பயந்து புறப்பட்டுப்போய் இரண்டாஞ் சாமத்திலேயும் எற்றெற்றென்றுவந்தது, அப்போதும்விழித்துப்பார்த்து அருளிச்செய்த, (வெண்பா.)

எண்ணாயிரத்திரண்டுநீரிற்கிடந்தாலும்... *
உள்ளீரமில்லாக்கிடைச்சடைபோல்- வண்ண
முலைப், பொற்றொடிமாதர்புணர்முலைமேற்
சேரானை, யெற்றோமற்றெற்றோமற்றெற்று.

என்றுசொன்ன ஔவையார்சொல்லைக்கேட்டுமீண்டுபோய்மூன்றுஞ்சாமத்திற்கு எற்றெற்றென்றுவந்தது அப்போது ஔவையார்விழித்துப்பார்த்துஅருளிச்செய்த.

(வெண்பா.)

மானமுள்ளதேதமனமுள்ளதேபுத்தி... *
தானுள்ளதேதன்னையுளந்த-யீனமுற... ... *

எற்றோவிளைத்தோமென்றேமாந் திருப்போ
ளா,எற்றோமற்றெற்றோமற்றெற்று... ...*

என்றுசொல்லக்கேட்டுமீண்டும்போய்நால
ஞ்சாமத்திலும்எற்றெற்றென்றுவந்தது, அப்
போதும்ஔவையார் அருள்செய்த,

(வெண்பா.)

கருங்குழவிசாக்காட்டிலவங்கனிபோல் ... *
வருந்திநீர்க்கன்னியர்தம்வாழ்க்கை - யரும்பக
லே, பற்றிப்பழம்பொருளைத்தாயத்தார்கொ
ள்வரோன்,றெற்றோமற்றெற்றோமற்றெற்று*

என்றுசொன்னவுடனேஇந்தநாலுசாமத்துக்கவியும்பார்த்துக்கொண்டுஇந்த ஔவையாருடையஅநுக்கிரகத்தினாலே கதிபெறலாமென்றுபூர்வஇராஜகுமாரத்தியாகவடிவு கொண்டுஔவையார்பாதத்திலேசாஷ்டாங்கமாகதெண்டனிட்டுகைகட்டிவாய்புதைத்துநின்றபோதுஔவையார் அந்த ஆவேசத்தைப்பார்த்துஇதன்வாய்ப்பிறப்புகேட்கவேண்டுமென்றுமனதிலெண்ணிக்கொண்டுநீயாரென்றுகேட்டபோது அந்தஆவேசமான இராஜகுமாரத்திசொல்லுவாள்ஏலங்குழலியென்றுசொல்வார்கள்நானும்என துதோழிமாருமாகஉப்பரிகையின்மேலேயிருந்துபந்தடித்துக்கொண்டிருக்கிறபோதுமறுபட்டணத்துஇராஜகுமாரன்இந்தப்பட்டணமேவந்துஉப்பரிகையினோ

த்திலிருந்துஎன்னைப்பார்த்தான், நானும் அவ
னைப்பார்த்தேன் பார்த்து இச்சையானபடியி
னாலேஎன்காதினோலையைவாங்கிகை நகத்தினா
லெழுதியவன்முன்னேபோட்டேன் அவனெ
ழுத்தறியாதபடியினாலேஇந்த சாவடியில்ஒரு
குஷ்டரோகியிருந்தான் அவன்கையிலந்த ஓ
லையைக்கொடுத்துவாசிக்கச்சொன்னான், அந்
த ஓலையிலிருந்தவிபரத்தைதமனதிலேவைத்து
க்கொண்டுஎன்னைப்போகிக்கலாமென்றெண்
ணிக்கொண்டு அந்தஇராஜகுமாரனைப்பயமு
றுத்தியோட்டிவிட்டான் அந்தக்குஷ்டரோகி
யிந்தச்சாவடிமூலையிலே படுத்துக்கொண்டி
ருந்தான், அதையறியாமல்கட்டி அவனைமுக
ந்துகொண்டேன் அவன்சரீரவேஷத்தைப்பா
ர்த்து அந்தஇராஜகுமாரனல்லவென்றுஏங்கி
உனைவிட்டுவிட்டேனம்மாவென்று சொல்லக்
கேட்டுஔவையாரும், நல்லதுஇப்பால்உனக்
கென்னவரம்வேண்டுமென்றுகேட்க, இராஜ
குமாரத்திசொல்வாள், நானின்னம்மறுபடியு
ம்ஜனனமெடுத்து நல்லசெல்வவதியாய்நான்
ஆசைப்பட்ட இராஜகுமாரனேஎனக்குப்புரு
ஷனாகவும் நானவனுக்குப்பாரியாகவுஞ்சிறிது
காலங்கூடிவாழ்ந்திருந்து அப்பால் கதியடை
யத்தக்கதாகவரந்தரவேண்டுமம்மாஎன்றுபின்
னையுந்தெண்டனிட்டுநின்றாள்ஔவையாருஞ்

சந்தே ஷிப்பட்டுச்சொல்வாள் நீஇறந்தவிசே
ஷித்தைக்கேட்டு அந்தராஜகுமாரனும் உனக்
காகவந்து இந்தச்சாவடியிலேவிஷித்தைத்தின்
று செத்தான், அந்தஆவேசரூபம் இங்கேதானே
யிருக்கிறதென்று சொன்னாள் அந்தவிசேஷித்
தைஆணுவேசங்கேட்டுஔவையார்நம்மையும
றிந்துசொன்னாள், இவள் ஈஸ்பரியாமென்று
ஆவேசரூபம்முன்னிருந்த இராஜகுமாரன்வடி
வமாகவந்துஔவையார்பாதத்திலே விழுந்து
சாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டுநின்றான். அ
ப்போதுஔவையார் பெண்ணுவேசத்தைப்
பார்த்துஇவனுக்குத்தானே நீ ஆசைப்பட்ட
தென்றுகேட்கஆமம்மாவென்றுசொல்லியது
அதன்பிறகுஅந்தப்பெண்ணுவேசத்துக்குஔ
வையார்அநுக்கிரகம்பாலித்தவிபரம்உனக்கு
பிரமதேவன்விதித்ததுஐம்பதுவயதுண்டு அ
திலேபன்னிரண்டுவயது கன்னிகையாயிருந்
தாய், ஒருவருஷம்ஆவேசமாயிருந்தாய், ஆகப்
பதின்மூன்றுவயதுசென்றது, இன்னம்உனக்
குஆயுசு முப்பத்தேழுவருஷமிருக்கின்றது.

இதிலே உனக்கு இருபத்தைந்துவயதளவு
ங்கன்னிகழியக்காரண மில்லை ஆனபடியினா
லே தெற்கேஉறையூரென்றொரு பட்டணமு
ண்டு அதிலே கரிகாலச்சோழன் இராச்சியபரி
பாலனம் பண்ணிக்கொண்டிருக்கிறான், அ

னிடத்திலேஆலாத்திபெண்கள் பன்னீராயிர
ம்பேர்களுண்டு அந்தப்பன்னீராயிரம்பெண்
களுக்குமுதல்வியானமரகதவடிவியென்றொ
ருபெண்ணுண்டு அந்தமரகதவடிவி வயிற்றி
லே நீபோய் வெகுஎவ்வளரூபசவுந்தரியத்
துடனேபிறக்கப்போகிறாய், நீபிறந்தவுடனே
பட்டணமெல்லாஞ்சண்பகப்பூவாசனைபரிம
ளிக்கும், அப்போதுசோழமகாராஜன் மகள்
அதிசயப்பட்டுஉன்னைச்சண்பகவடிவியென்
றுபேரிடுவாள், அந்தப்பேரைக்கொண்டுவள
ருகிறநாளிலே உன்னுடைய ரூபாதிசயத்தை
க்கேள்விப்பட்டுசந்தோஷமடைந்து சோழ
மகாராஜனானவன் நீபிறந்தபோது பின்னையும்
பெண்கள்பிறந்ததுண்டோவென்று விசாரிக்
கும்போது பன்னீராயிரம்பெண்கள்வயிற்றி
லும்பன்னீராயிரம்பெண்குழந்தைகள்பிறந்
திருக்கிறதென்று சொல்லுவார்கள், அந்தப்
பெண்களேயுமுன்னேயுமெடுத்து வாச்சொல்
லிலட்சணக்காரனையழைப்பித்து லட்சணம்
பார்க்கச்சொல்லி அவர்கள்லட்சணம்பார்த்து
நன்றாயிருக்கிறதென்றுசொல்லுவார்கள்.

அப்போது உன்னைப்பெற்றதாய் மரகதவ
டிவியையழைப்பித்துஉன்னை நன்றாகவளர்க்க
ச்சொல்லிகட்டளையிட்டு உன்னை ஐந்துவயதி
லேபள்ளிக்கூடவைத்துசகலமானகல்வியுங்கற்பி

த்துஎழுவயதிலேஆடல்பாடல்களுங்கற்பித்தி ருக்கின்றநாளேயில்லைபன்னிரண்டுவயதும்பக் குவமாய்வெகுரூபவதியாயிருப்பாய், ஒருநா ளேயத்தினத்தில் சோழமகாராஜன் உன்னைய ழைப்பித்துநீகற்றிருக்கிற வித்தை ஆடல்பா டல்களையெல்லாம்பார்ப்பான்தமிழிலேவெகு மிச்சமாயிருப்பாய், ஆனபடியினாலேசோழ மாகாராஜன்சந்தோஷப்பட்டுஇவள் தமிழுக் குரியவளென்றும்இன்றுமுதற்கொண்டுசண் பகவடிவியென்கிறபெயலாவேண்டாமென் றுமாற்றித் தமிழறியும்பெருமாளென்றுபெ யர்கொடுத்திருக்கச்சே சோழமகாராஜனுட னேசொல்லிக்கொள்வாய் ஐயாவே,என்னுட னேகல்விப்பிரசங்கம்பண்ணி யென்னிலும்ல விமிச்சமானவனைச்சேருவேன் ஆகாதபேர்க ளைத்தள்ளிவிடுவேன்.

எப்படிக்கொற்றமன்னர்மண்டலீகர் வந் தாலும்வந்தவர்கள்கையில்மூந்தி ஆயிரம்பொ ன்வாங்கிக்கொண்டுஅதன்பிறகு ஒருகவியைச் சொல்லிஅந்தகவிக்குப்பொருள்சொல்லவகை யறியாமல்விட்டால் அவனைஅடித்துஓட்டிவி ட்டுகன்னிகழியாமல் அன்றைக்காயிரம் பொ ன்வாங்கிக்கொண்டுஉண்டு சுகித்திருப்பேனெ ன்றுசொல்ல,அப்போதுஇராஜாவுஞ்சந்தோ ஷப்பட்டு,அப்படியே நீகீர்த்திபடைத்திருந்

நால்போதும்போது மென்று சொல்லிஅப்
போதுனக்கு வேறேஅரண்மனைக்கட்டிஅந்த
அரண்மனைக்குஏழு மதிலும்அறுபத்துநான்
கு வாசலும்வாசலுக்குவாசல்விநோதம்செய்தி
ருக்கிறவாசலும் சூத்திரப்பதுமை யிருக்கிற
வாசலும்புலியிருக்கிறவாசலுங்கரடியிருக்கிற
வாசலும்யானையிருக்கிறவாசசலுங்குரங்கிருக்
கிறவாசலும் வேட்டைநாயிருக்கிறவாசலுங்கி
ளிருக்கிறவாசலும், அந்தக்கிணற்றிலேயிழி
ந்தால் சூஸ்திரப்பலகைமேலே மூடிக்கொள்
ளவும், அதுகடந்துஅப்புறம்போனால் குங்கு
மச்சேறிருக்கிற வாசலும், அந்தக் குங்குமச்
சேற்றைக்கடந்தவன் கால்கழுவ ஆழாக்கு ப
னிநீர் வெள்ளி வட்டிலில்அக்கரையிலே வைத்
திருக்கிறதுஞ், சித்திரமண்டபங்களும், பா
ரதம்.இராமாயணம்- அரிச்சந்திரன்கதை-நள
ராஜன்கதை- இப்படிக்கொற்றவிச்சித்திரங்க
ளெழுதியிருக்கிறமண்டபங்களும், நீராழிம
ண்டபங்களும், பளிங்குமாமண்டபமுந், தமி
ழறியுமண்டபமும்இயலறியுமண்டபமும்.இ
சையறியுமண்டபமுங்கூத்துப்பார்க்கிறமண்
டபமும், இவைகளெல்லாம்வைப்பித்துஇதற்
கப்பால்கோழிச்சேவல்குத்துக்கு விடுகிறவா
சலும்ஆட்டுக்கடாய்பாய்ச்சலுக்குவிடுகிறவா
சலும், நாடகசாலைவாசலும், அப்பால் நடுமத்

தியிலேவெகுஅலங்காரமானகச்சேரி மண்ட
பமும்.அதிம்லகளிற்றுனைத்தந்தக்கட்டிலும்,
பெடையானைத்தந்தக்கட்டிலுந் சுங்குமஞ்ச
மாகச்சோடித்து அந்தக்கட்டில்கால்மாடுதலை
மாடுதெரியாதபாவனையாகப்போடுவித்து த
லைமாட்டிலேதிலைக்கண்ணுடியுங் .கால்மாட்டி
லேகூஸ்திரப்பதுமைகளும்வைப்பித்திருக்கு
ம்அந்தக்கட்டிலின்பேரிலேகால்மாடு தலைமா
டறிந்து படுத்துக்கொண்டால் அந்தப்பிரத
மைகளில்ஒன்றுகால்பிடிக்கவும்·கைபிடிக்கவு
ம்,ஒன்றுவிசறியெடுத்துவிசறவும், சிறிதுபா
க்குவெற்றிலைமடித்துக்கொடுக்கவும் சிறுதத
ம்பலப்படிகமேந்தவும் இப்படியாக அநேக
ம்பரிசாலகம் பண்ணிக்கொண்டிருக்கவும் வ
கையறியாமல்வந்து கால்மாட்டிலே தலையை
வைத்துப்படுத்துக்கொண்டால் அந்தகூஸ்திர
ப்பதுமைகளிலொன்றுதலையை வளைத்துப்பி
டிக்கும்ஒன்றுமூத்திரம் பேயும் ஒன்றுதலை
யைச்சினாகருஒன்றுசாணிகொண்டுவந்துதலை
மீதில்வைக்கும்·ஒன்றுவிளக்கேற்றிவைக்கும்
இப்படிவேண்டியவிநோதங்களெல்லாம்உண்
டுபண்ணிவைத்து உனக்குப்பச்சைப்பல்லக்
குங்கட்டளையிட்டுநீபிறக்கச்சேபிறந்த பன்
னீராயிரம்பெண்களையும் உனக்குச்சேவிக்கத்
தக்கதாகக்கட்டளைபண்ணி,இரதகச்துரகபதா

திகளையுங்கட்டளைபண்ணிஇவைகளல்லாமல்உ
னக்குச்சரிசமானமாகவிருக்கப்பட்ட தோழி
மார்இயலறியும்பெருமாளென்றும், இசைய
றியும்பெருமாளென்றும் ?இரண்டுபேருண்டு
அந்தத்தோழிமாரும்நீயுமாகப்பல்லக்கிலேறி
க்கொண்டு ஆடல்பாடல்மேள தாளங்களுட
னேவெகுஆடம்பரத்துடன்காலைப்போதிலு
ம்நல்லமத்தியானகாலமுஞ்சாயங்காலமும் இ
ந்தமூன்றுநேரமுஞ்சோழமகாராஜன்கொலு
விற்குப்போய்ஆடல்பாடல் முதலியவைகள்
செய்துதிரும்பும்படிகட்டளைபண்ணிபகலைக்
கும்இராத்திரிக்கும் பொழுதுபோக்குதலாக
தருமகதைகளைக்கேட்கவும்? அரதேசிபரதே
சிகளுக் கன்னம்பராமரிக்கவும் மஞ்சனமாட
வும்,போஜனம்பண்ணவும் ஆடையாபரணந்
தரிக்கவும், கேளிக்கைபார்க்கவும், பளிங்குமா
மண்டபத்தில்ஒருஜாமம்நித்திரைபண்ணவும்
இப்படிசகலஆடம்பரமுங்கட்டளையிட்டுசோ
ழமகாராஜாவானவர்உண்டுபண்ணுவார்.

அந்தப்பிரகாரம்இந்தமூப்பத்தெட்டுவயத
ளவுங் கன்னிகழியாமல்வெகுயோகசாலியாயி
ருப்பாய்இந்தஇராஜகுமாரனும் அந்தப்பட்
டணத்திலேஒருவிறகுதலையன் வயிற்றிலேபிற
ந்துபெரியவனாகிவிறகுவிற்றுவயிறுவளர்த்து
க்கொண்டுதிரிவான்- இப்படியாக இருக்கிற

போதுஒருநாள்காலையில் கடைத்தெருவில்வி
றகுசுமையைச்சாற்றிவைத்துகடையிலேஉட்
கார்ந்துகொண்டிருப்பான். அந்தச்சமயத்தி
லேநீயுந்தோழிமாருமாகவெகுஆடம்பரத்து
டனேசோழமகாராஜன் கொலுவுக்குப்போ
ய்ஆடல்பாடல்செய்துகொலுக்கண்டுதிரும்ப
வும்அரண்மனைக்குப்போகிறபோது கடைத்
தெருவழியாகவருவாய் இந்தவிறகுதலையனும்
நீவருகிறவேடிக்கையைப்பார்த்துக்கொண்டி
ருப்பான் அப்போது நீயுமிவனைப்பார்ப்பாய்
பார்த்தவுடனே உன்பக்கத்திலிருந்ததோழிக
ளையழைத்துஅந்தக்கடையிலேயிருக்கிறவனை
ப்பாருங்கள், பாசிப்பல்லும்- பூசாமுகமும்,
வெந்தவீட்டுக்கரிமரம்போலேகாலுங்கையும்
அரையிற்சுற்றியகொடியும் . அதிலேசொருகி
யஅரிவாளும், இப்படியாகஇருக்கிறவனையும்ஒ
ருபெண்பிள்ளையுஞ்சேருவாளோவென்றுகே
ட்க, அதற்குத்தோழிசொல்வது- அப்படியே
ன்சொல்லுகிறாய் ஊசியுமல்லவோ ஒருசரட்
டைக்கோத்துக்கொண்டிருக்கிறது இவனுக்கு
ம்ஒருத்தியிருப்பாளென்றுசொல்லுவாள் அந்
தவசனத்தைக்கேட்டு நீயுமிவனைப்பார்த்துகா
ரியுமிழ்வாய்நானுமுமிழ்ந்தேனென்றுசொல்
ல- அதையிந்தவிறகுதலையன்கண்டு, இவள் ஸ்தி
ரீஜாதியானவள் நம்மைப்பார்த்துயுமிழ்ந்தா

ரணமென்ன ஆண்பிள்ளையெப்படியிருந்தா
லென்ன நல்லது இவளுக்கு எப்படியாகிலும்
ஆயிரம்பொன்சவதரித்துக்கொண்டுஇவளண்
டைக்குப்போய்இவளுக்குக்கொடுத்துஇவளை
ச்சேராமற்போவேனென்றுமனதிலேபிர
திக்கினைபண்ணிக்கொண்டுபோய்அதற்கேற்ற
பேருடனேசொல்லிஆயிரம்பொன்னுஞ்சவ
தரித்துக்கொண்டுஉன்னரண்மனைக்கு வருவா
ன்வந்தவன்கையிலேஆயிரம்பொன்னும்வாங்
கிக்கொண்டுஅதன்பிறகு ஒருகவியைச்சொல்
லுவாய்அந்தக்கவிக்குப்பொருளறியாமல் வி
ழிப்பான்அப்போது அடித்துஓட்டிவிடுவாய்
அந்தப்பட்டணத்திலே அவனுக்குமுன்னேவ
ந்துஉன்கையில்அடிபட்டுப்போனபேரிருப்
பார்களேஅவர்களண்டைக்குப்போய் முறை
யிடுவான்-அதற்கவர்கள்சொல்லுவார்கள்அடா
பயித்தியக்காரா-நீ ஆயிரம்பொன்னல்லபதி
னாயிரம்பொன்கொடுத்தாலும்உன்காரியம்ஆ
கப்போகிறதில்லை,அவனுடனேகவிசொல்லிஉ
த்தரப்பிரசங்கம் பண்ணத்தக்கபேர் இங்
கொருவருமில்லை ஆகையினாலே கவிசொல்
லிகல்விவல்லமையினாலேஜெயித்தாற்காரியமா
ம்மற்றப்படிக்குக்காரியமாகப்போகிறதில்லை
நீயுஞ்சமர்த்தனானால் மதுரையிலேபாண்டிய
ராஜாவினுடையசங்கத்தார் நாற்பத்தொன்ப

துபேரிருக்கிறார்கள் அவர்களண்டைக்குப் போய் முறையிட்டால்அப்போதுஏதாவது அவர்கள்வந்துசெய்தால் செய்வார்கள்இல்லாவிட்டால் இங்கேயாருமவனுக்கெதிராளியில்லை அங்கே போம்பிள்ளாயென்றுசொல்லுவார்கள் அப்போதிந்தவிறகுதலையனும்மதுரைக்குப்போய்சங்கத்தாருடனேமுறையிடுவான்.

அதுகேட்டு நற்கீரர்வந்து ஒரு இராத்திரியெல்லாமுன்னுடன் பிரிதுவாதித்துஉன்னைத் தோற்கடித்து தமிழறியும்பெருமாளென்கிற பெயரையுமாற்றிவைத்துஅதன்பிறகு விறகுதலையனுக்குஉன்னைவிவாகம் பண்ணிவைத்துப்போடுவார், அப்பால் உனக்குப் பின்னையும் ஆயிசு பன்னிரண்டுவயதுண்டேஅந்தப்பன்னிரண்டுவருஷமும்நீங்களிரண்டுபேருங்கூடிவாழ்ந்திருந்து அப்பால்நீங்கள் கதியடைந்துபோகுங்களென்று ஒளவையார் வரங்கொடுத்தார், அதுகேட்டுஇரண்டாவேசமும் சாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டு ஒளவையார்கையில் அநுப்புவித்துக்கொண்டுபோயின, ஒளவையாருந் தன்னிருப்பிடம்போய்ச்சேர்ந்தாள் - இப்பால்பெண்ணாவேசமும்உறையூரிலேதேவவடியாளானமரகதவடிவியிற்றிலே பிறந்தாள் ஆணாவேசமும் அந்தப்பட்டணத்திலே விறகுதலையன்வயிற்றிலேபிறந்தான், இவனுக்

ளுத்தமிழறிவாளென்று பெயருண்டாகி ஔ
வையார்வரங்கொடுத்தபடிக்குமுன்னாலேசொ
ன்னபிரகாரம் சோழமஹாராஜன்முகாந்தர
மாய்ச்சகலபிரதிஷ்டைகளுமுண்டாச்சுது- இ
ப்படியிருக்கிறநாளிலேஒருநாள்பச்சைப் ப
ல்லக்கின்மேலேறிக்கொண்டு பன்னீராயிரம்
பெண்களும்சேவித்துவரபகலிற்பந்தம்பிடி
க்க-வெண்சாமரைவீசத்தோழிமாரிரண்டு பக்
கத்திலும்வரக்கட்டியக்காரர்கட்டியங்கூறிஎச்
சரிக்கைசொல்லப் பதினெட்டுமேளவாத்திய
முழங்க,தம்புரு;வீணைகின்னரி-சுரமண்டலம்
இராவணாஸ்திரம்-குடமுழா, இப்படிக்கொற்
ற ராகசங்கீதமுழங்கிவரரூபலாவண்ணியத்து
டனேவரவிபரெல்லாம்மூற்சையாய்வீழ்ந்திட
வுஞ்-சோழமகாராஜன் கொலுவிற்குச்சென்
று அவர்திருமுகம்பெற்றுதிரும்பிவருகிறபோ
து அந்தவிறகுதலையனைக்கடையிலேகண்டு இ
வனையும் ஒருபெண்பிள்ளைசேருவாளோ வெ
ன்றுகாரியுமிழ்ந்தாள் அதையந்தவிறகுதலைய
ன்கண்டு பளாபளா நன்றாயிருக்கின்றது இவ
ளாகிறதேது சோழமகாராஜன்வீட்டு வெள்ளா
ட்டிப்பெண் இவளெப்படியிருந்தாலுந் தே
வடியாள்தான்-நாமென்ன ஆண்பிள்ளையல்ல
வோஎன்னைப்பார்த்து இவள் உமிழ்ந்தகாரண
மென்ன இவளுக்கித்தனை கறுவமென்னவென்

றுகோபித்துக்கொண்டு என்டங்கிலேசெய்வ மிராமற்போகிறதாளபபடியும் ஆயிரம்பொ ன்னையுஞ்சவதரித்துக்கொண்டு இவளண்டைக் குபபோகாமற் போகிறேனுவென்று சபதங் கூறிக்கொண்டுதன்வீட்டுக்குமுதலாய்ப போ காமற்புறபபட்டுகாட்டிலேபோய்விறகுவெ ட்டிக்கொண்டுஅந்தக்காட்டிலே ஒருமாமரம் வருஷித்துக்கொருபழம்பழுக்கும அந்தப்ப ழத்தை ஒருரிஷிவந்து அறுத்துச்சாபபிடுவார் அபபடிக்கொற்றமாமரத்தின்கீழேயிந்தவிற குதலையன்மெத்தவெய்யிலானபடியினுலே வ ந்துநிழலிலே படுத்துக்கொண்டிருந்தான் அ ப்போது அந்தமரத்திலேபழம்பழுததுஇரு ந்ததுஅந்தப்பழத்தைக் கண்டறுத்துவீட்டுக் குபபோகிறபோதுசாபபிடலாமென்று மடி யிலேவைத்துக்கொண்டிருந்தான் வெய்யில் தாழ்ந்தவுடனேயெழுந்திருந்து போய்ப்பி ன்னையும்விறகுவெட்டிக்கொண்டிருந்தான்.

அன்றைக்குரிஷிவந்து மரத்தைப்பார்த்து பழமில்லாததுகண்டு வருஷாவருஷிந்தப்பா மலிருக்கிறபழம்இபபோதில்லாமற் போவா னேனென்றுஅங் ஙனே சுற்றிப்பார்க்கிற[illegible] துஇந்தவிறகுதலையன்அப்பாலேவிறகுவெட் டுகிறசத்தங்கேட்டு அவனண்டைவந்து இ[illegible] மாமரம்வருஷித்துக்கொருபழம்பழுக்கு

ம்வந்து அந்தப்பழத்தை அறுத்துச்சாப்பிடு
கிறது பிள்ளையாருந்தீண்டுகிறதில்லை இப்போ
து அந்தப்பழத்தைக்காணோம் நீயேதாகிலுங்
கண்டதுண்டோவென்றுகேட்க அந்தவிறகு
தலையனும்இல்லையென்றுசொன்னால்ரிஷியீஸ்
ரன்சாபமிடப்போகிறாரென்று பயந்துஐ
யாவெட்யிலுக்குப்போய்அந்தமரத்தின்கீழ
யிருந்தேன் அந்தப்பழத்தைக்கண்டறுத்துப்
பிற்பாடுசாப்பிடலாமென்றுமடியில்வைத்து
கொண்டிருக்கிறேன் இந்தாருமென்றுசொ
ல்லிக்கொடுத்தான். அப்போதந்தரிஷியுஞ்சந்
தோஷப்பட்டு பழத்தைச் சாப்பிடாமல் வை
த்துக்கொண்டிருந்து நாம்கேட்டவுடனேயில்
லையென்று சொல்லாமல்கொடுத்தானல்லவா
இவன் நல்லவன் இவனுக்கொருவரங்கொடுப்
போமென்று அவனையழைத்து அங்கேநின்ற
விருட்சங்களைக்காண்பித்து இந்தமரங்கள் உன
க்குச்சந்தனமரங்களாகக்கடவது- இவைகளை
வெட்டிக் கொண்டுபோய் விற்றுக்கொள் இ
ந்தமரங்களினாலே உனக்குவேண்டிய ஐசுவரி
யம்வரும்மகாராஜனாக இருக்கப்போகிறாயெ
ன்று சொல்லிப்போனார் -- அதன்பிறகு அந்
தவிறகுதலையனும்அந்தச்சந்தனமரத்தைவெ
ட்டிக்கட்டைகட்டையாகத்தறித்துசுமைகட்டி
க்கொண்டு அந்தப்பட்டணத்திலுண்டான கு

டிபண்டகள்-துராதுரைகள்பதாதிகள்மந்திரி
பிரதானிகள்-பிராமணர்-வர்த்தகர்- மற்றுமு
ண்டானபேருக்கெல்லாம்வீடுவீடுதப்பாமலொ
ர்கட்டுவிறகுப் ஓர்சந்தனகட்டையுமாகப்போ
ட்டுவருவான்-முன்னாலேவிறகுவித்து அன்றை
க்கன்றைக்குகூலிவாங்கிக்கொண்டு போய்வயி
றுவளர்த்துக்கொண்டுதிரிகிறவன் முன்புசெய்
ததெல்லாம்போய்இப்போதுதமிழறியும்பெ
ருமாள் நிமித்தியமாகப்பொன்சேர வேண்டு
மென்று கூலிவாங்காமல்பிட்சையெடுத்துவயி
று வளர்த்துக்கொண்டு சும்மாப்போவான்
ஆராகிலும்விறகுகேட்டாலுங் கொடாவிட்டா
லும்வலியக்கொண்டுபோய்வாசல்தோறுஞ்ச
ந்தனக்கட்டையும்போட்டுவருவான்ஆராகிலு
மழைத்து உனக்குண்டான கூலியைவாங்கிக்
கொண்டுபோவென்றால் எனக்கு வேண்டிய
போது வாங்கிக்கொள்ளுவேனென்று சொல்
லிக்கொண்டுதிரிந்தான்

இப்படியிருக்கிறநாளையிலே அந்தப்பட்ட
ணத்திலொருப் பெரிய செட்டியார் வீட்டிலிரு
க்கிறவெள்ளாட்டியானவள் அன்றைக்குச்சந்த
னக்கட்டையை விறகென்றுநினைத்து அடுப்பி
லேவைத்துஎரியவிடும்போது அந்தப்பட்டண
மெங்குஞ்சந்தனவாசனைகமகமவென்றுபரி
மளித்தது, செட்டியாரு மதிசயப்பட்டுவெளி

கையிலிருந்து ஓடிவந்து தன்வீட்டின்மடைப்ப
ள்ளியறைக்குட்போய் அடுப்பிலே என்னத்
தைப்போட்டெரியவிட்டீர்களென்றுஞ்சந்த
னவாசனைவருவானேனென்றுங்கேழ்க்க அதற்
குவெள்ளாட்டிசொன்னது, நான் ஆரோ ஒருவ
ன்வெட்டியான்போலேயிருக்கின்றது அவன்
நாளுந்தோறும் ஒருசுமைவிறகுபோட்டுப்போ
வான் அவையெல்லாம் ஒருமூலையிலே யிருக்கி
ன்றன, அவைகளிற்பெருங்கட்டையையெடுத்து
விறகென்றுநினைத்து அறியாமல் அடுப்பிலே
வைத்தேன்.

இதுதான்விபரமென்றுசொல்லி இதுவும
ல்லாமல் அவன்முன்னெல்லாம் விறகுகொண்டுவந்
துபோட்டு அன்றைக்கன்றைக்கு உண்டான கூ
லியைவாங்கிக்கொண்டுபோவான் இப்போதுஎ
ன்னமோதெரியாதுகூலிவாங்காமல்விறகைமா
த்திரம்போட்டுவிட்டுச் சும்மாய்ப்போகிறான்
நீங்களவனையழைத்து கூலியைவாங்கிக்கொ
ண்டுபோவென்றால் எனக்குத்தேவையானபோ
து வாங்கிக்கொண்டுபோகிறேன் உங்களுக்கெ
ன்னவென்றுசொல்லி இப்படிகூலிவாங்காம
ல் ஒருமாதம்நாற்பதுநாளாகச்சும்மாய்ப்போ
கிறான், அதென்னமோதெரியாதையாவென்று
ஞ்செட்டியார்அந்தவிசேஷத்தைக்கேட்டுவிற
குவிற்றுக்கூலிவாங்கிச்சாப்பிடுகிறவன்கூலிவாங்

காமற்கும்மாய்ப்போகிறகாரணமென்னமோ
தெரியாதுபுதுமையாயிருக்கிறது,இதனைவிசா
ரித்தறியவேண்டும்,அப்படியே நாளைக்குநம்
முடையவீட்டுக்குவிறகுகட்டிக்கொண்டு வந்
தால்அவனைநம்மிடத்துக்கு அழைத்துக்கொ
ண்டுவாவென்றுசொல்லிஅவன்முன்புகொண்
டுவந்தசந்தனக்கட்டை அம்பாரத்தைப்பார்த்
துசந்தோஷப்பட்டுமளிகையிலேபோயிருந்
தார்-மறுநாள்காலமேவந்துவிறகுபோட்டுப்
போகிறபோதுசெட்டியார் வீட்டுத்தாதிகண்
டு அந்தவிறகுதலையனையழைத்துக்கொண்டு
போய்செட்டியார்முன்புவிட்டாள். செட்டி
யாரும்விறகுதலையனும்பார்த்துநீயாருப்பிள்
ளாயென்றுகேட்டார். அப்பாநான்பரதேசிவி
றகுவிற்கிறவனென்றுசொன்னான் விறகுவிற்
றுவயறுவளர்க்கிறவனானால்கூலிவாங்காமற்கும்
மாய்ப்போகிறதேனையா அதென்னசொல்லும்பி
ள்ளாயென்றுகேட்டார்விறகுதலையனும் ஐயா
எனக்கொருகாரியமுண்டு அந்தக்காரியத்தைநீ
ங்கள்செலவப்படுத்திக்கொடுப்பீர்களென்று
நம்பிகூலிவாங்காமற்கும்மாய்ப்போகிறேனெ
ன்றான்- அந்தக்காரியமென்னவென்று கேட்
டார்விறகுதலையனுஞ்செட்டியாருடனேசொ
ல்லவெற்க்கப்பட்டிருந்தான்செட்டியவர் நல்
லவரானபடியினாலே இதை நாம்பராமரிக்க

வேண்டுமென்றுமனதிலெண்ணிக்கொண்டுவி
றகுதலையனை அருகிலழைத்துநீபயப்படாமற்
சொல்லும் பிள்ளாயென்று கேட்டார். அப்
போதுவிறகுதலையன் சொல்லுவான்ஐயா நா
ன்கடையிலே விறகுசுமையைச் சாற்றிவைத்
துக்கொண்டிருக்கச்சேதமிழறியும்பெருமாள்
தோழிமாருந்தானுமாகவெகு ஆடம்பரத்து
டனேசோழராசாவண்டைக்குப்போய் கொ
லுமுகங்கண்டு திரும்பிகடைத்தெருவழியாக
த்தன்னரண்மனைக்குப போகிறபோதுவேடி
க்கைபார்த்துக்கொண்டிருந்தேன் அப்போ
துதமிழறியும்பெருமாள் என்னைப்பார்த்துஇ
ப்படிவேஷங்கொலந்திருக்கிறவனையும் ஒரு
பெண்பிள்ளையானவள் சேருவாளோவென்று
தோழியைக்கேட்டாள் அதற்குத்தோழியிருந்
து அவனுக்குமொருத்தியுண்டாயிருப்பாளெ
ன்றாள் அந்தவிசேஷத்தைக்கேட்டுத் தமிழறி
யும்பெருமாளென்னைப்பார்த்துகாறியுமிழ்ந்
தாள். அதுகண்டுநானும்இவளென்னைப்பார்த்
து உமிழவந்தகாரணமென்ன நான் ஆண்பிள்
ளையெப்படியிருந்தாலென்ன இப்படிச்சொ
ற்றவளையே அநுபவிக்கவேண்டுமென்று நினை
த்துபொன்னுக்கு வழியில்லாதபடியினாலே
யிந்தவேலையைசெய்துகொண்டிருக்கிறேனை
யாவென்றான்செட்டியாருமந்தவிசேஷத்தை

க்கேட்டு குலுங்கக்குலுங்கநகைத்து இவனிருக்கிறவேஷமென்ன, அவனிருக்கிறயோகமென்ன. தேசதேசத்து ராஜாக்களெல்லாரும் வந்து அடிபட்டுப்போகிறார்களே இப்படிமூடனாயிருக்கிறவனண்டைக்கு இவன்போகிறவிதமெப்படி ஆனாலுமென்ன, இவனுடைய அதிர்ஷ்டமென்னமோ தெரியாது இதைநாமேன்தடைசெய்யவேண்டுமென்றுமனதிலெண்ணிக்கொண்டு நல்லது இங்கேயிரும்பிள்ளாயென்றுவிறகுதலையனைமளிகையிலேவைத்து, செட்டியார் தன்வீட்டுக்குப்போய் முன்போட்டிருந்தசந்தனக்கட்டைகளையெல்லாம்பார்த்து அவைகளைவிலைமதிக்கும்போது பதினாயிரம்பொன்னுக்கு அதிகமாயிருந்தபடியினாலேசந்தோஷப்பட்டு விறகுதலையனையழைப்பித்து இன்னமெங்கே விறகுபோட்டிருக்கிறாயென்றுகேட்கவீட்டுக்குவீடு தப்பாமற்போட்டிருக்கிறேனென்றான் நல்லதென்று சொல்லிசெட்டியாரும் இவன்கையிலே விறகுபோட்டுவித்துக்கொண்டவர்களையெல்லாம் அழைப்பித்துஅவர்களோடு ஆலோசனைபண்ணிக்கொண்டு இந்தவிறகுதலையனை ராஜவடிவாக்கி வெகு ஆடம்பரத்துடனே அனுப்புவிக்கவேண்டுமென்று எல்லாரும்பேசிக்கொண்டு நாவிதனையழைப்பித்து விறகுதலையனுக்குப்பணிசெய்வித்துச்சம்

பங்கியெண்ணெயிட்டுத் தலைமுழுகப்படுத்தி
கடுக்கன்மோதிரஞ்சரப்பணிவெள்ளிஅரைநா
ண்மற்றுமுண்டான ஆபரணங்களும்பூட்டி,ப
ச்சைவடந்தோவத்திகட்டி,பாகைசாலுவை.அ
ங்கிநிஜார்,நடுக்கட்டு,இவைகளெல்லாந் தரிப்
பித்துதிவ்வியமானபோஜனம் பண்ணுவித்து
கஸ்தூரி பரிமளாதிகளும் அணியப்பண்ணி பா
க்குவெற்றிலையுங்கொடுத்து. எக்காளமேளம்;
பேரிகைபூரிகை.பதினெட்டுவகை மேளவாத்
தியங்கள்முழங்கும்படிசெய்வித்து விறகுத
லையனைமன்மதவடிவமாக்கிப்பச்சைப்பல்லக்
கிலேவைத்து ஆயிரம்பொன்முடிப்புங்கட்டி
தண்டிகையில்வைத்து மேளதாளமுழங்க ரத
கஜதுரகபதாதிகள்புடைசூழ சிறுதிப்பெண்
கள்முன்னே ஆடிககொண்டுவர அடப்பக்கார
ன்வெற்றிலைச்சுருள்மடித்துக் கொடுத்துவர இ
ப்படியாக வெகு ஆடம்பர அலங்காரமாக்கிவி
த்துப்பட்டணத்துப்பெரியசெட்டியாரும் ம
ற்றுமுண்டானபெருமிவனைப்பயணம்பண்ணி
ஓகோராஜவே தமிழறியும்பெருமாளிடத்தி
ற்குப்போய்வாருமென்று அனுப்புவித்தார்க
ள் அப்போதுவிறகுதலையனை இராஜாவுந் த
மிழறியும்பெருமாளிடத்திற்குப்போகிறப்பா
த்துமேளவாத்தியத்தொனி பட்டணமெல்லாம்
அதிர்ந்துபோகத்தக்கதாகமுழக்கிவித்தான் —

அதைக்கண்டு இதேதோ தெரியாதெப்போதை
யும்போலேயிருக்கவில்லை இன்றைக்கு மேளவா
த்தியம் வெகுவாயடிபட்டுவருகிறது. இவனெந்
தத்தேசத்துராஜாவோ தெரியாதென்று ஆச்சரி
யப்பட்டுத்தமிழறியும்பெருமாளுந்தோழிமா
ருமாகஉப்பரிகையின்மேலேறிச்சிறிதுநேரம்
பார்த்துக்கொண்டிருந்து தாதிகள்வெள்ளைச்சி
கள்கற்றுச்சொல்லிப்பெண்கள் இவர்களை அ
ழைத்துஎன்னசொன்னாளென்றால் அந்தஇரா
ஜா நம்முடையதலைவாசலிலேவந்திறங்கிவிசுவா
சங்கொடுத்தால்வாருங்களென்றுசொல்லி தா
னுந்தோழிமாருமாகஉப்பரிகைவிட்டிறங்கித்
தானிருக்குமிடமேபோய்ச்சேர்ந்தாள் அதன்
பிறகுவிறகுதலையனைஇராஜாவுஞ்ஜெயஜெய
வென்றுவெகுஆடம்பரத்துடனே தமிழறியு
ம்பெருமாளுடைய அரண்மனைவாசலிலேவந்
திறங்கினன்சிறிதுநேரஞ்சென்றபிற்பாடுதன்
னோடுகூடவந்தவர்களையெல்லாம்அனுப்பிவி
ட்டுத்தானும்அடப்பக்காரனுமாகஇருந்தான்
அதுகண்டுவெள்ளைச்சிகள்கற்றுச்சொல்லிவந்
துஇராஜாவேநீர்எந்ததேசமென்றார்கள். அதற்
குவிறகுதலையனும்நாம்இராஜாவல்லவே இவர்
களுடனேநமக்குநன்றாய்ப்பேசவராதேநாம்
பேசினல்மோசம்வரப்போகிறதென்றுபேசா
மல்மவுனமாயிருந்தான் அதுகண்டுஇதென்ன

மோ இவன் வாயைத்திறவாமலிருக்கிறானென்
றபின்னையுமிவனைப்பார்த்துபழமொழியோ
புதுமொழியோவென்றார்கள் அதற்குஞ்சும்
மாவிருந்தான்பின்னையும் நீசொன்னநிறைகுட
மோகுறைகுடமோவென்றார்கள்அதற்குஞ்சு
ம்மாவிருந்தான்பின்னையும்ஊமையோசெவி
டோவென்றார்கள்அதற்குஞ் சும்மாவிருந்தா
ன்இந்தநான்குவிசேஷித்துக்குஞ் சும்மாவிரு
ந்தபடியினாலேமௌனச்சிகமெண்ணிக்கொ
ண்டது இவர்பேசாமலிருக்கிறதெல்லாமுதலா
ளியாயிருக்கிறதமிழறியும் பெருமாளுடனே
பேசிக்கொள்வோம் இவர்களுடன் நமக்கென்
னபேச்சிருக்கிறதென்றுஎண்ணிக்கொண்டிரு
க்கிறானென்றுநிச்சயித்துக்கொண்டார்கள் அ
வன்பேசவகையறியாமலிருக்கிறது அறியாம
ல்அவளுடனேபேசிக்கொள்வோமென்றிருக்
கிறோமென்றுநினைத்து சும்மாயிருந்தார்கள்· பி
ன்னையுஞ் சற்றுநேரத்துக்குப்பிறகு இராஜா
வேநீரெங்களுடனேபேசாவிட்டாற்போனபோ
ச்சுது இப்போதிங்கேயாருக்குவிசுவாசங்கொ
ண்டுவந்தீரென்றார்களதற்குவிறகுதலையன்வா
யைத்திறந்துஉங்கள்நாச்சியாருக்குக் கொண்
டுவந்தேனவளுக்குப் பரியமென்ன வென்று
கேட்டான் ஆயிரம்பொன் பரியமென்றுசொ
ன்னார்கள்நல்லதென்றுதன்மடிகையிலிருந்த ஆ

யிரம்பொன்முடிப்பைஎடுத்துக் கொடுத்தான் அதைவாங்கிக்கொண்டு வந்து தமிழறியும்பெருமாள்முன்னேவைத்தத்தார்கள் நான்கு வசனங்கேட்டதுமதற்கொன்றுஞ்சொல்லாமல்மவுனமாயிருந்ததும்பிறகுக்கட்டவசனத்துக்குப்பொன்கொடுத்ததுஞ்சொன்னார்கள் அதுகேட்டுஇவன்மட்டப்பயலென்றறிந்துதாதிகளையழைத்துபொன்னையெடுத்துக்கொண்டுபோய்ப்பட்டணம்நாட்டம்பார்க்கிறபெண்கையிற்கொடுத்துப் பார்வையிடுவித்துக்கொண்டு பொன்னைப்பொக்கிஷப்பெட்டியிற்பிரவேசம்பண்ணிவித்து அந்தஇராஜாவைத் தெருத்திண்ணையிலிருக்கவைத்துவாருங்களென்றுசொல்லியனுப்பினாள் அப்படியேதாதிகள் பொன்னைபார்வையிடுவித்துப்பொக்கிஷப் பெட்டியிற்சேர்த்துஇராஜாவைத்தெருத்திண்ணையிலிருக்கச்சொல்லிப்போனார்கள்சிறிது நேரஞ்சென்றபிறகு அந்தஇராஜாவைக் கூத்துப்பார்க்கிறமண்டபத்துக்குஅழைத்து வரச்சொல்லியனுப்பினாள்.

அப்படியேஅழைத்துவருகிறபோது விறகுதலையனைஇராஜாவும் இரண்டாங்கட்டுக்கடத்துஇப்பால்வரச்சே அங்கேயிருக்கிறசித்திரங்களையும்பவுனச்சிகளைக்கண்டு மோகித்துதிகைத்துஅவர்களைப்பார்த்துக்கொண்டிருந்

தானதிலேபொழுதுவிடிந்தது பின்னையுமப்
பாலேபோகப்போகிறபோது தாதிகளோடே
வந்து அடா மூடா மோசம்போனாய் பொழுது
விடிந்துப்போயிற்றே இனி உனக் கப்புறம் போ
கச் செலவில்லையென்றுகழுத்தைப் பிடரியிலே
குத்திட முறத்தாலே யடித்துத்தள்ளி ஓட்டி
விட்டார்கள் அந்த அடியைப்பட்டுக் கொண்டு
போய்விறகுதலையனும் என்கையிலே ஆயிரம்
பொன்னை வாங்கிக்கொண்டு சும்மா அடித்து ஓ
ட்டிவிட்டார்களென்று தெருவிலே போய்கூ
வினான் அதுகேட்டு மௌனச்சிகள் இதேதோ
தெரியாது இன்றையவரையிலே யிப்படி கூவி
னம்பரிலை இவனுக்கோ தெரியாதென்று அவனை
த்திரும்பவுமழைத்து நீகூவுகிறதென்னவெ
ன்றுகேட்டார்கள் அதற்கு விறகுதலையன் சொ
ல்லுவான் என்கையிலே பொன்னை வாங்கிக்கொ
ண்டால் எனக்கு ஒப்புசொல்லத்தேவையில்லை
யே சும்மா அடித்து ஓட்டிவிட்டால் நான் கூவா
மலென்ன செய்வேனென்றான் அதற்கு மௌ
னச்சிகள் சொன்னது உன்கையிலே பொன்வா
ங்கிக்கொண்டால் ஒப்புசொல்லவேண்டியது
உள்ளதுதான், ஆனாலென்னமாச்சுது நாமொரு
கவிசொல்லுகிறோமதற்குப் பயசொன்னால்
அப்படியேயாகிறதென்றது மௌனச்சிகளில்
ஒருத்தி ஒருகவி சொன்னாள் அந்தக்கவியைக்கே

ட்டுஒன்றுந்தெரியாமற் பேய்போலேவிழித்துக்கொண்டிருந்தான் அதுகண்டு மூன்னேயடித்ததுபொய்இப்போதடிக்கிறது மெய்யென்றுடமுறத்தாலேயும். டழந்துடைப்பத்தாலேயுமடித்து கழுதையின்மேலேற வைத்துகோலங்காட்டி ஓட்டிவிட்டார்கள்.

அந்தஅடியைப்பட்டுக்கொண்டுவிறகுதலையனும்பட்டணத்திலே போய்தமிழறியும்பெருமாள்கையிலேமூன்றுமேலே அடிப்பட்டுத்தங்கள்தேசத்துக்குப்போகவெழுக்கப்பட்டிருக்கிறார்களே அந்தராஜாக்களுடனே சொல்லிமுறையிட்டான் அதற்கவர்கள் சொன்னார்கள் நாங்களுமப்படிதான் அவமானப்பட்டிருக்கிறோம் எங்களுடனே சொல்லிமுறையிட்டால்ஆகவேண்டியதென்ன இருக்கிறது அவளுக்கு ஆயிரம்பொன்னல்ல பதினாயிரம்பொன் கொடுத்தாலும்ஒன்றுமில்லை அவளுடனே கவிசொல்லிபிரதிஉத்தரங்கொடுத்து அவளைசெயித்தாற்காரியமாம் இங்கே அம்மாத்திரங்கவிப்பிரசங்கம்பண்ணிஅவளைச்செயிக்கத்தக்கன ஆண்பிள்ளையிந்த சீமையிலேயில்லை அவளுக்கொருவருமெதிரில்லை ஆனபடியினாலே மதுரையிலேபாண்டியராஜ னிடத்திலே பிரசண்டவித்துவ பிசராகியசங்கத்தார் சங்கப்பலகையின்மேரிலே நாற்பத்தொன்பதுபேரிருக்கிறார்க

ள் அவர்களேகல்விக்குரியவர்களல்லாமல் அவர்களுக்குமின்னவர்கள் ஒருவருமில்லையென்றுசொல்லிக்கொண்டிருக்கிறார்கள் இங்கேயிவளிப்படிபேரிட்டுக்கொண்டிருக்கிறதை யறியார்கள் நீயுஞ்சமர்த்தனானால் அவர்களிடத்திற்போய் முறையிட்டுக்கொண்டாயேயாமாகில் அப்போது அவர்கள் வந்து இவளைச் சர்வபங்கம்பண்ணினால்பண்ணலாமேயல்லாமல் இல்லாவிட்டால் இங்கேயாரும் எதிரியில்லை நீபோகிறதானால் சீக்கிரமாகப்புறப்பட்டு மதுரைக்குப் போம்பிள்ளாயென்றார்கள் விறகுதலையனும் அந்தவிசேஷத்தைக்கேட்டு நான்பொன்தேடப்பட்ட அருமையெனக்குத்தெரியும் அப்படி தேடினபொன்னைக்கொடுத்துசும்மாய்ப்போவேனாவென்றுவெகு கோபத்துடனேபுறப்பட்டுமதுரைக்குப்போனான் போனவிடத்திலே சங்கத்தாருக்குப் பாற்குடங்கள்கொண்டுபோனார்கள்விறகுதலையன் ஒருசக்குமார்த்தடியையெடுத்துகையிலே பிடித்துக்கொண்டுகுறுக்கேபோய்நீங்களாரடா பாற்குடமேதடா ஆருக்குக் கொண்டுபோகிறீர்களடா வென்று அதைமறித்தான் அதற்குஇடையர்சொன்னது சங்கத்தாருக்குப்பாற்கொண்டு போகிறோமென்றார்கள் அதுகேட்டுவிறகுதலையனும் சங்கத்தாரா யார்கொண்டுபோகிறதேது என்

றுபாற்குடங்களைத் தனைழர்துப்போட்டான்.
அப்போது இடையர் பிரமித்துநின்றுஇவனு
ரோதெரியாது சங்கத்தாருக்குத்தடையில்லை
யேபாண்டியராஜாமுதற்கொண்டுஎதிர்வார்த்
தைசொல்லக்கூடாமத அப்படிக்கொற்றசங்
கத்தாரைச்சட்டைபண்ணுமல் அவர்களுக்குப்
போகிறபாற்குடத்தை தனைழஞ்சானேயென்
றுபயந்து ஒருவன் ஓட்டமாகவோடிவந்துசங்
கத்தாரைக்கண்டுசுவாமீயாரோதெரியாதுஒரு
வன்வந்துதேவரீர்களுக்குகொண்டுவருகிறபா
ற்குடங்களைதடுத்துப்போட்டான்என்றுசொ
ல்ல, சங்கத்தாரும் அந்தவிசேஷத்தைக்கேட்டு
பிரமித்து நமக்குந்தடையுண்டோவென்றும்
அவனெப்படிக்கொற்றவனென்றுஞ் சொல்
லிஇரண்டொருத்தரெழுந்துவிரகுதலையனைக்
கண்டுநீயாரடாஎங்களுக்குவருகிற பாற்குடங்
களைதடுத்தகாரணமென்னவென்றார்கள்.

அதற்குவிறகுதலையன் சொன்னதுஉங்களு
க்குச்சங்கத்தாரென்கிறபேரென்ன, சங்கப்ப
லகையென்ன, வித்தையாண்மையென்ன நீங்
களெம்மாத்திரமென்றுதடுத்தேனென்றான்.
அதுகேட்டுச்சங்கத்தாரும் இந்தவிசேஷம்எ
திலேசொன்னாய் அதனைத்தெரியச்சொல்ல
வேண்டுமென்றார்கள் அதற்குவிறகுதலையன்
சொன்னது-உறையூரிலேசோழராஜன்வீட்டு

வெள்ளாட்டிப்பெண் தமிழுக்குடையவள்தானேயல்லாமல்தனக்கொருவரும் நிகரில்லையென்றுவேறேஅரண்மனைகட்டிக்கொண்டுவெகுஆடம்பரமாகத்தன்வாசலில்னடால்கட்டிவைத்துதமிழறியும்பெருமாளென்று பேரிட்டுக்கொண்டுஎந்ததேசத்து மண்டலாதிபர்வந்தாலும் அவர்கள்கையிலேமுந்தி ஆயிரம்பொன் வாங்கிக்கொண்டுவந்தவர்களுக்கு ஒருகவியைச்சொல்லிஅந்தகவிக்குப்பொருள் தெரியாவிட்டால்அவர்களை அவமரியாதைசெய்து ஓட்டிவிட்டு கன்னிகழியாமற்றேடியுண்டு இப்படியாகட்டோர்பெற்ற ஓர்பெண்பிள்ளையிருக்கச்சேஉங்களுக்குச்சங்கத்தாரென்கிறபேர் ஏதையாமென்றான்.

அதுகேட்டுச்சங்கத்தாரும்மகா நன்றாயிருக்கின்றது, நாங்களேதமிழுக்குரியவர்கள் எங்களுக்காரும்எதிரிகளில்லையென்றுநாங்களிருக்கச்சே ஒருபெண்பிள்ளையிப்படிப்பேரிட்டுக்கொண்டிருக்கிறாளென்றால்இதென்ன ஆச்சரியமாயிருக்கின்றது ஆயினும்இன்றையவரைக்கும்ஒருவராவதுவந்து இவ்விதமாகச் சொன்னதுமில்லைமுறையிட்டதுமில்லை நாங்கள்கேள்விப்பட்டதுமில்லைஇப்போது நீமுறையிட்டகாரியம்மெத்தஉனக்கேதாகிலும் மனதிலேகுறைவுண்டோவென்றுகேட்டார்கள், அதற்குவீ

றகுதலைபன்சொல்லுகின்றதுதான்கடையிலே யிருந்தும்தமிழறியும்பெருமாள்தன்னைப்பா ர்த்துசாதியுமிழந்ததும்அதற்க கவிரகுஞ்சந் தனக்கட்டையும் போட்டதும்பட்டணத்துச் செட்டியார்தன்னை இராஜவடிவாக்கி ஆயிரம் பொன்கொடுத்துவெகு ஆடம்பரத்துடனே அனுப்பிவித்ததும்அந்தப்பொன்னும் வாங்கிக் கொண்டு ஒருகவியைச்சொல்லிஅடித்தலோட் டிவிட்டதும் அதைவிஸ்தாரமாகச்சொல்லி இ தினிவித்தியார்த்தம் உங்களிடத்துக்குவந்துவி ண்ணம்பம்பண்ணிக்கொண்டேன்சுவாமிஎன் றான், அதுகேட்டுசங்கத்தாரும்நல்லது இவன் மட்சையைநம்பப்போகாதென்று மனதிலெண் ணிக்கொண்டு இதுமெய்யோபொய்யோவிப ரமாயறியவேண்டுமென்று இந்த விறகுதலைய னைத்தங்களிடத்திலே வைத்துக்கொண்டு பின் னை ஒருவனையழைத்து அவன்கையில் ஆயி ரம்பொன்முடிப்புகட்டிக்கொடுத்தவிபரம்.

(வெண்பா)

மின்னேரிடையாய்விலைபெசிவாங்குமது .. *
பொன்னாயிரமுண்டேபோதாம்தா -எந்நாளு
சத்திறன்திராதே சதிராகவாங்கிபது [ஞ்
பொற்றொடிக்குப்போனும்புகழ் ...... *

இந்தககவியுமெழுதிக்கொடுத்து இசற்கெ ன்னசொல்லி யனுப்புகிறுளோ .. பார்த்துக்

கொள்ளுவோமென்று மூடன்பிரயாணப்படு த்திஉறையூருக்குப்போய்த்தமிழறியும்பெரு மாளைக் கண்டுவரச்சொல்லியனுப்பினார்கள்- அப்படியேயவன்உறையூருக்குப்போய்த் த மிழறியும்பெருமாள்அரண்மனைவாசலிலேநி ன்றான் அப்போதுமௌனசிகள்கண்டு எங் கேயிருந்துவந்தாயென்றுகேட்க, மதுரையி லிருந்து சங்கத்தார்அனுப்புவிக்கவந்தேனெ ன்றான்-என்னகொண்டுவந்தாயென்றார்கள் ஆ யிரம்பொன்னும் ஒருகவியுங்கொண்டுவந்தே னென்றான், அந்தப்பொன்னையுங்கவியையும் வாங்கிக்கொண்டுபோய்த்தமிழறியும்பெருமா ள்முன்புவைத்துஆரோஒருவன்மதுரையிலே சங்கத்தார்கொடுத்தனுப்பினார்களென்றுகொ ண்டுவந்துகொடுத்தானென்றுசொன்னார்கள் அதுகேட்டுத்தமிழறியும்பெருமாளும் நல்ல தென்று அந்தக்கவியைப்பார்த்துவாசித்துக் கொண்டுஇந்தக்கவியிலே நம்மைச்சபித்தனு ழுதியனுப்பினார்களென்றுவெகுகோபத்துட னே அந்தக்கவிக்குமறுகவியெழுதினவிபரம்,

(வெண்பா.)

ஆடைபருத்திதருமாகிலங்கொருத்தி ... *
கோடிபருத்திகொண்டென்செய்வாள், மூடர்
கவித்திறமையுண்டாகிற்கற்றநூற்கொண்டு *
கவிப்பாரோசங்கத்தவர் .... *

என்றுஇந்தக்கவியுமெழுதிக்கொடுத்துபொன்னையுங்கொடுத்து அனுப்பிவிட்டாள் அவனும் மதுரையிலேவந்து சங்கத்தாரைக்கண்டு பொன்னையுங்கவியையும் அவர்கள்முன்னே வைத்தான் சங்கத்தாரும்அந்தக்கவியைப்பார்த்து ஆ-ஆ-வெள்ளாட்டிதன்னைச் சொல்லிக்கொள்வதைவிட்டுநம்மையெல்லாரையும்கூடவொன்றுகவிஎழுதியனுப்பினாள், அவளண்டைக்குப்போய்கவிப்பிரசங்கம்பண்ணித்தோற்கச்செய்துஅவளரண்மனையையுமிடித்துத்தமிழறியும்பெருமாளென்கிறபெயரையு மாற்றிப்போட்டுவரவேண்டுமென்றுவெகுகோபத்துடனேசங்கத்தார் நாற்பத்தொன்பதுபேருமெழுந்திருந்தார்கள்- அப்போதுநக்கீரர்ஒருவசனஞ்சொல்லுகிறார் வாருங்கள்சங்கத்தாரே நாமெல்லோரும்போய்க்கவிப்பிரசங்கம்பண்ணிவென்றுவருகிறதுநன்மையல்ல, பார்க்கிறவர்கட்குநன்றாயிராது ஒருபெண்பிள்ளைநிமித்தியார்த்தம்நாற்பத்தொன்பது பேர்போய்வென்றுவந்தார்களாமென்றால்; எவ்வளவுஈனத்துவம் அதனால்பாதொருபிரயோசனமில்லை நீங்களெல்லோரும் இவ்விடத்திலே தானேயிருங்கள் நான்ஒருவனுமேபோய் அவளுடனேபிரதிவாதித்துஅவளைத்தோற்கச்செய்து தமிழறியும்பெருமாளென்கிறபேரையுமாற்றிவித்துஇந்த

விறகுதலையனுக்குத்தானே அவனைக்கவியா
ணம்பண்ணுவித்துவருகிறேனென்றார், அதி
லேசிறிதும்பேர்தமிழறிவாளென்கிற பேர்பெ
ற்றிருக்கிறதும்அவள்ஔவையார்வரப்பிரசாதி
ஆராலேயுஞ்செயிக்கக்கூடாமலிருக்கிறவளெ
ன்றுங்காற்றுவிசேஷமாய்க் கேள்விப்பட்டிரு
ப்போம், ஆனால்அதுஎதோஎவ்விடமோவென்
றுஅசட்டையாகஇருந்தோம், அதுமெய்யாக
விளைந்திருக்கிறது அப்படியவள் ஔவையார்
கையிலேவரம்பெற்று ஆராலேயும்அழிக்கப்
படாமலிருக்கிறவளைநீர்போய்எப்படிசெயித்
துவருவீரென்றுகேட்டார்கள் அதற்குநக்கீரர்
சொன்னது- நான்போய்அவளைச்செயித்துவ
ாமற்போனால் இன்னபடியென்று பிரதிக்கி
னைபண்ணிக்கொண்ட. *

[வெண்பா.]

சென்றுறையூர்புக்கிச் சேயிழையையான்க
ண்டு, வென்றுதமிழறித்துமீளெனல்-மண்
ணில், விருந்திருக்கவுண்டவெறுவலியாதொ
ப்பன், வருந்துவரோ சங்கத்தவர்.... *

என்றுசொல்லக்கேட்டுச்சங்கத்தாரனைவரு
ஞ்செவிகளைப்புதைத்துக்கொண்டு சிவசிவா
மவன்றுசொல்லிபின்புநல்லது அப்படியே
போய்வாருமென்றனுப்பினார்கள், அப்
போதுநக்கீரரும் விறகுதலையனையழைத்துக்

கொண்டுமதுரையைவிட்டுப்புறப்பட்டுஉறை
யூர்க்குவருகிறபோதுநடுவேகாடாயிருந்தது
அந்தக்காட்டின்வழியாகவரச்சேஒருவடதாரி
மரத்தின்பேரிலேவள்ளிக்கொடிபடர்த்திருந்
தது அதையொருவேடன்கண்டுமேலேயிருக்
கிறசிக்குச்சிறகெல்லாம்அறுத்துப்போட்டுக
ட்டப்பாறையினாலேவள்ளிக்கிழங்கைப்பெய
ர்த்துக்கொண்டிருந்தான் அதைநற்கீரர்கண்டு
ஒருகவியாகப்பிணைத்துக்கொண்டு அவனுடன்
தர்க்கம்பண்ணித்தீராத விதத்திற்கு இதைஅ
வனுக்குத்தெரியாமற்கண்டசுத்திபாடிதோற்
கச்செய்வோமென்று மனதிலெண்ணிக்கொ
ண்டுஅப்பாலேபோகிறபோது விறகுதலைய
னையழைத்துவாரும்பிள்ளாய் தம்பிஅவனிருக்
கிறஅரண்மனையின்கட்டுகாவலென்ன அங்கே
யென்னென்னஅதிசயங்களுண்டோ அவைக
ளையெல்லாம்விபரமாய்எனக்குத்தெரியச்சொ
ல்லுமென்றுகேட்டார்அதற்குவிறகுதலையன்
சொல்லுவான்,ஐயா அவனிருக்கிற அரண்மனை
க்குஏழுமதிலும், அறுபத்துநான்குவாசலும்
வாசலுக்குவாசல்மௌனச்சிகள்கற்றுச்சொல்
லிகள்,எக்கா-த்திகள்சூஸ்திரப்பிரதமைகள்யா
னைகள்புலிகள்,கரடிகள்குரங்குகள்.வேட்டை
நாய்கள்கிணறுகுங்குமச்சேறு-சித்திரமண்ட
பம்-கச்சேரிமண்டபத்திற்கெளித்தியானைத்தந்

தக்கட்டிலும் பெண்ணுனைத்தந்தக்கட்டிலும்
போட்டிருக்கிறதாம் பின்னையுமென்னென்ன
மோவிருக்கிறதென்பார்கள் எனக்குச்சொல்ல
த்தெரியாது ＊

அங்கேயிப்படிக்கொற்ற விநோதங்களெல்
லாமிருக்கின்றன ஐயாவென்றான், அதுகேட்டு
நற்கீரர் இன்னமும் விநோதங்களிருக்கலாமெ
ன்று நினைத்துக்கொண்டுவிறகுதலையனையழை
த்து எண்ணெய்ச்சீலைமூங்கிலக்கினி செம்பருத்
திப்பூமல்லிகைப்பூ, காந்தக்கல்கட்டெரும்பு
அலவன்வாழைத்தண்டு கருப்பங்கறணை எலு
மிச்சம்பழம் இவைகளெல்லாஞ் சவதரித்துக்
கொண்டுவாவென்று அனுப்பினார் அப்படியே
போய் அவைகளனைத்தையுஞ்சவதரித்துக்கொ
ண்டுவந்தான் அதன்பிறகு இருவரும் புறப்பட்
டுத்திருச்சிராப்பள்ளிக்குவந்து மேற்குமுக
மாகத்திரும்பிப்பார்த்தார் உறையூர்ப்பட்டண
த்திலேதமிழறியும் பெருமாளிருக்கிறஉப்பரி
கையின்மீதில்செய்துவைத்திருக்கிற பொற்கு
டந்தோன்றிற்று அதைக்கண்டு நற்கீரரும்விற
குதலையனையழைத்து அதோ பொற்குடந்தெ
ரிகிறதே அது எந்தவூர் எந்தகோபுரமென்று
கேட்டார் அது அந்தவெள்ளாட்டியிருக்கிற அ
ரண்மனைக்குள்ளே உப்பரிகையின்பேரிலிரு
க்கிறபொற்குடமையா வென்றான் அதுகேட்டு

நற்கிரர்பிறகு தம்முடைய மனதிற்பிரதிக்கி னைபண்ணிக்கொண்ட, *

(வெண்பா)

இதுவோசிராப்பள்ளியீர்த்தாவுறையூர் ... *
இதுவோதமிழறிவாளெல்லை, யிதுவோ... *
இறைவளர்க்குஞ்சங்க மிவளழிப்பதென்றே *
குறைவுறத்தானவெல்வேன்குறித்து ... ... *

என்றுபிரதிக்கினை பண்ணிக்கொண்டு இப்பால்உறையூர்பட்டணத்திற்போய்ச்சேர்ந்தார்கள் அப்போதுசாயங்காலவேளையாச்சுது அதன்பிறகு நற்கீரதேவரும்விறகுதலையனை ஓரிடத்திலேவைத்து தமது பச்சைவடந்-தோவத்தி-பாகை-கடுக்கன்மோதிரம்மற்றுமுள்ள ஆபரணங்களையெல்லாம்விறகுதலையன் வசம்பண்ணி அவனையங்கேயிருக்கச்சொல்லி அவன்கட்டியிருந்தகரித்துணியை வாங்கித்தலையிலுமரையிலுங்கட்டிக்கொண்டு இரண்டுகொடியைப்பிடுங்கியிடுப்பிலே சுற்றிக்கொண்டுஅதில் ஒருஅரிவாளையுஞ் சொருகிக்கொண்டுஇவ்விதமாகவிறகுதலையன்வேஷம்பூண்டு அந்தமாற்றெல்லாம்மடியிலேயடக்கமாய்வைத்துக்கொண்டுவாளைமுத்தண்டைச் சுமையாகக்கட்டித்தலைமேலேவைத்துக்கொண்டு தமிழறியும்பெருமாளிருக்கிற அரண்மனையைநோக்கிவருகிறபோதுசூரியன் அஸ்தமிக்கிரசமையமாச்சுது

அவ்வேளையிலேநர்கிரதேவரும்வாழத்தண்
டை விரகாகக்கட்டிக்கொண்டு மூகசாலையிற்
போனார் மூசற்கட்டுவாசலிலே கற்றுச்சொல்
லிப்பெண்களிருக்கிறதைக்கண்டு விறகுவிலை
கூறினர், (வெண்பா.)

வெய்யோன்கதிரெறிப்ப வேற்கண்ணாள்பின்
றொடரத், ைபவருதேன்பயனதி்யன்தப்
ப.மலர்த்தடங்கண்வாய்ந்தமயிலனையீர்கொள்
ளீர்-விலைக்குவிறகோவிறகு ... ... *

என்றுகூறியசேதியைக் கற்றுச்சொல்லிப்
பெண்கள் கேட்டு விறகுநம்முடையநாச்சியா
ருக்குளதிராளியாயொருவன்வந்துகவிசொன்
னதுமில்லை-அந்தக்கவியைக்கற்றுக்கொண்டு
போய்நாம் அவனுக்குச் சொன்னதுமில்லையே
வன்வந்தாலும் அவனுக்குநம்முடையநாச்
சியார்கவியைச்சொல்லிப்பொருளறியாதபோ
து அடித்து ஓட்டிவிடுகிறதல்லவோ இதுவென தெ
தெரியாது ஆச்சரியமாயிருக்கிறதென்றுநினை
த்துஇந்தகவியைக் கற்றுக்கொண்டுபோய்த்த
மிழறியும்பெருமாளுடனே ஆர் ஒருவன்வா
ழத்தண்டைக்கட்டித்தலைமேலே வைத்துக்
கொண்டுவிறகென்றுவிலைகூறிக்கொண்டுஇந்த
கவியைச்சொல்லினனென்று சொன்னார்க
ள்,அதுகேட்டுத்தமிழறியும்பெருமாள்மறுக
சொல்லியனுப்பின ... *

(வெண்பா.)

உள்ளீரம்பச்சைபுகையுமெரியாது ... *
கொள்ளீர்விறகெனகூறினீர்-மெள்ள. ...*
விரகரோபோம்போம்வீணரோநீரூந் .. *
தரகரோசங்கத்தவர் *

என்றுசொல்லஇந்தக்கவியைக்கற்றுச்சொல்லிப்பெண்கள் கற்றுக்கொண்டு போய்விறகுதலையனுக்குச்சொன்னார்கள் அதைக்கேட்டு விறகுதலையனைநக்கீரர் இரண்டாங்கட்டுக்குள்ளேபோய்ச்சொன்ன *

(வெண்பா,)

சாலாவுலர்ந்துண்டுசாலகத்தினுற்புகைபோ
நீலவிழிமாதர்க்குநின்றெறியும் கோலக் ..
கலைக்குவிலையல்குற் கனங்குழலீர் கொள்ளீர்
விலைக்குவிறகோவிறகு ... ...

இந்தக்கவியைக் கற்றுக்கொண்டுபோய்த் மிழறியும்பெருமாளுடனே சொன்னார்கள்-அதைக்கேட்டுஅவள் இவனைக் கொண்டாடிக் கொண்டுஇவன் நல்லவித்துவானுமாய் விபக காரமுள்ளவனுமாய்நல்ல இலட்சணமறிந்த னுமாயிருக்கிறான்.கவிவெகு நேத்தியாயிரு கின்றது,இதைநாம்இரட்டிக்கப்போகாது. ன்றையவரைக்குங்கன்னிகழியாமற்றேடியு டுகீர்த்திபடைத்திருந்தோம் இப்போதிவன் ன்னகாரணமாய்வந்தானோ தெரியாதுஇவன

ம்மைச்சோதிக்கவந்தவனுக்காண்கின்றதூஆ
ளுமென்ன இவனிட சமர்த்தைப்பார்ப்போ
ம்இந்தக்கட்டுகளெல்லாங்கடக்கச்சே யிடைந
டுவில்மோசம்போகாமல்வந்து நம்முடனேக
விப்பிரசங்கம்பண்ணிநம்மிலும்வல்லவனுகவி
ருந்தால் அப்படிக்கொற்றவனைக் கூடினுற்று
னென்ன தோஷமில்லையென்றெண்ணிக்கொ
ண்டு மறுமொழிசொல்லியனுப்பின *

(வெண்பா,)

பால்பாயவெட்டிப்பசுமையுலர்ந்ததோ...*
(சால்பட்டுவீழ்ந்துதைந்துகட்டினையோ சால
ம்-புகையுமோவுண்மைப்புகழ்ந்துரையாய்நீ
எம்-வகையாகவாசலில்லவந்து ... ... *

இந்தகவியைக்கொண்டுபோய்விறகுதலைய
னுக்குச்சொல்ல-விறகுதலையன் மூன்றுங்கட்
டுக்குள்ளேபோய்ச்சொன்ன (வெண்பா,)

ஈரமுலர்ந்தேதயெலும்புபோலேகாய்ந்துச
சாலவெரியுமிதுதையலே-மாலை ... *
யிரவுவருமுன்னேயிகழாமலிந்த ..... *
டிறகதனைக்கொள்கவிஞர்நீ ... ... *

இந்தக்கவியைச்சற்றுக்கொண்டுபோய்த்தமி
ழெறியும்பெருமாளுடனேசொல்ல, அப்போ
து தமிழறியும்பெருமாள்சொன்ன

(வெண்பா,)

விற்றகோவிறகென்றுமேன் மேலுங்கூறும் *

விறகுவிற்பான்றன்னருளுமேவி-விறகு ... *
விலைகேட்டுவாருமென்றுமெல்லியலாள்கேட்
டாள்-கலையாய்த்தமிழறிவாள்காண் ... ... *

அந்தக்கவியைக்கற்றுக்கொண்டு போய்விறகுதலையனுக்குச்சொல்ல, அதுகேட்டுவிறகுதலையனைநக்கீரர்நான்காம்வாசற்கடந்துவந்து ஐந்தாம்வாசலிலேசொன்ன

(வெண்பா,)

கட்டுவிறகுவிலைகன்னியரே கூறக்கேள் ... *
வெட்டுவிறகுதனைவீசனுரிட்ட ... ... *
நற்றவர்க்குநன்மடவீர்நான்கொண்டுவந்த *
விறகாயிரம்பொன்விலை ... ... *

என்றுசொல்லிஐந்தாம்வாசற்கடந்து, ஆறாம்வாசலுக்குவரஇந்தக்கவியைக்கற்றுச்சொல்லிகள்போய்த் தமிழறியும் பெருமாளுக்குச்சொல்லஇவன்நல்லவித்துவானெனச் சரியென்று பின்னையுஞ்சொல்வாள் *

(வெண்பா,)

பச்சைசழுமுழுதுமெரியாதுபாரிடத்தில் ... *
இச்சையினுவன்மேலுமியம்பக்கேள்-நிச்சயமா
ய்-உள்ளவிலைசொல்லுமெனவேதத்தெரிந்து
வந்து-இன்னேகாள்சொல்லீர்கினந்து ... *

இந்தக்கவியைக்கற்றுச்சொல்லிகள் விறகுதலையனுக்குச்சொல்ல, விறகுதலையனுமேழாம்வாசலில்வந்துசொன்ன

(வெண்பா.)

ஐந்நூறிரட்டிப்பொன்னைப்புறமுஞ்சோறுக
றி-யென்னார்விறகுவிலையிப்படியே-முன்
னை நான்-சொன்னபடியேயொழியச்சொல்
லதியாப்பேதைகாண், கின்னாவிடையாட்குச்
செப்பு ... (... ...) ... ... *

இந்தக்கவியைக்கற்றுச்சொல்லிகள், போய்த்த
மிழறியும்பெருமாளுக்குச்சொல்ல, அதுகே
ட்டுத்தமிழறியும்பெருமாளும்விசாரப்பட்டு
வருகிறதெல்லாம்வரட்டும்பார்ப்போமென்று
கற்றுச்சொல்லிகள்கையிலே ஆயிரம்பொன்
னும்தாழிஅரிசியும்.மிளகு-முளகாய்-புளி.கா
ய்ச்சி முதலானவைகளைக்கொடுத்து இவைக
ளைக்கொண்டுபோய் விறகுதலையன்கையிலே
கொடுத்து அவன்போடுகிறவிறகைப்போடுவி
த்துக்கொண்டு அவனையனுப்பிவிடுங்களென்
றுசொல்ல, அப்படியேகற்றுச்சொல்லிப்
பெண்கள்வந்து அந்தஆயிரம்பொன்னையும்
அரிசிமுதலானவைகளையுங்கொடுத்து விறகு
போடென்றார்கள் அப்படியேவாங்கிக்கொண்
டு அவர்கள்சொன்னபடியே எட்டாம்வாசலி
லேபோட்டு அங்கேயிருந்துக்கொண்டுகற்றுச்
சொல்லிப்பெண்களை அழைத்துத்திரும்பவு
ம்அந்தப்பொன்னையும் அரிசிமுதலானவைக
ளையுங்கொடுத்து இந்தப்பொன்னை உங்கள் தக

ச்சியாருக்குஇராத்திரிக்குப்பரியமாகவைத்து
க்கொள்ளச்சொல்லு இந்த அரிசியைச்சமைத்
து நமக்கு இராத்திரிக்குச் சாப்பாடு பண்ணி
வைக்கச்சொல்லென்று அதற்கொருகவியையு
ஞ்சொல்லிஅனுப்பினவகை ... ... *

(வெண்பா)

தந்தபொன்னுமுங்கள் தமிழறிவாட்கேபனை
யும்- அந்தவரிசிகளிடுமசனம். மூன்றுமொழி*
பாகனையசொல்லீர்பகருமுந்தம்பாவையர்க்
குப்-போமென்றுன்கூடாதபோது ... ...*

க்கற்றுச்சொல்லிப்பெண்கள்தமிழறிவாளிட
த்திற்குப்போய்ப்பொன்னையும் அரிசிமுதலான
வைகளையுமுன்னேவைத்து அந்தக்கவியையுஞ்
சொன்னார்கள், அதுகேட்டு இதுஎன்னகாரண
மோதெரியாதென்றுவிசாரப்பட்டுபின்னையு
ங்கற்றுச்சொல்லிகள் தாதிகளையழைத்துச்
சொல்லுவாள்பெண்ணைக்கொண்டுபோய்ப்பொ
க்கிஷத்திலேசேர்த்து அந்த அரிசியைத்தொம்
பரத்திற்போட்டுசமையல்பண்ணிவித்து அந்
தவிதருதலையனைப்பிறவறத்திண்ணையிலிருக்க
ச்சொல்லி நீங்கள்இவனென்ன சொல்லுகிற
னோஅவனையறியாததுபோலேகுறுக்கும்நெ
டுக்குமாக உலாவித்திரிந்து கேட்டுக்கொண்டு
வாருங்களென்றுசொல்லியனுப்பினாள், அப்
படியேபொன்னைப்பொக்கிஷத்திலேசேர்த்

துப்போட்டு அரிசியைத் தொம்பாத்திலே போட்டுச்சமைக்கச்சொல்லிவந்துவிறகுதலே யனைப்புறவறத்திண்ணையிலிருக்கச் சொல்லித் தாங்களிவனென்னசொல்லுகிருனே வென் றுஅறியாததுபோலேகுறுக்கும்நெடுக்குமா கவுலாவித்திரிந்துகொண்டிருந்தார்கள்- அப் போதுவிறகுதலையனுன நற்கீரன்தவநந்திண் ணையின்மீதிருக்கச்சே அந்தத்திண்ணக்கெதி ராகவொருபுளியமரமூம்பனைமரமுங்கூடவளர் ந்து இரண்டுமொன்ருய்ப்பிணைத்துக்கொ ண்டிருந்தது, சாயங்காலமானபடியினுலே அ ந்தமரத்தின்மீது ஒருகொக்குவந்திறங்கியிரு ந்தது நற்கீரர் அந்தக்கொக்கைப்பார்த்துச் சொன்ன (வெண்பா.)

பனியிலரும்பனையிற்பொன்றலைக்கொக்கே*
யிளமைமொழியாதிருந்தீர்-தளருவதேன் *
எம்மைப்பிரிந்தவரோஎம்மிலுந்தாரியரோ*
உம்மைப்பிரித்தாருரை ... ... *

என்றுசொல்லஇந்தக்கவியைக்கற்றுச்சொ ல்லிகள்போய்த் தமிழறிவாளுக்குச்சொல்ல, அதுகேட்டுத்தமிழறிவாளும் அந்தக்கட்டுக்க டந்துஒன்பதாங்கட்டுக்குள் அழைத்துவாச் சொல்ல.அப்படியேயழைத்துவந்துவிட்டா ர்கள், அந்தக்கட்டுக்குள்ளிருந்து விறகுதலைய னுனநற்கீரர்சொன்னது ... *

(வெண்பா.)

ஊசிமுனையிலொளிபுத்துக்கோர்த்ததுபேர்
வீசும்பனிவந்துமெய்குளிர,—மூச [ல்
முலைத்தடங்கண்மாதேமுழுவினையேற்கின்று
நிலைக்கடையோநிச்சயித்தாநீ .... *

என்றுசொல்லக்கேட்டுகற்றுச்சொல்லிப்
பெண்கள்போய்த்தமிழறிவாளுக்குச்சொல்ல
அதுகேட்டுத் தமிழறிவாளும் இப்பாலவனையழைத்
துவந்துவைக்கோல்போட்டு கொடுக்கச்சொ
ல்ல, அப்படியேபத்தாங்கட்டுக்குள்ளேயழை
த்துவந்துவைக்கோலின்பேரிலே ஒருகந்தை
யைப்போட்டுப்படுத்துக்கொண்டுவிரகுதலை
யனுநற்கீரர்சொல்லிய,(வெண்பா.)

வைக்கோல்சயனத்தில் வாரியமுன்றானையி
ன்மேல்- மெய்த்தோல்வாந்திக்கிடவும்பே
மொய்க்கும்மதுவெழுகுப்பூங்கொன்றைவா
ர்சடையோவிற்றைக்கிதுவேவிதித்ததெமக்கு

என்றுசொன்னகவியைக்கற்றுச்சொல்லி
கள்போய்த்தமிழறிவளுக்குச்சொல்லஅதுகே
ட்டுஅவள்சொன்னது அவனையிப்பாலழைத்
துவந்தொருபாயும்வைக்கோல்தலைகணையும்
போட்டுக்கொடுக்கச்சொல்ல, அப்படியே
போட்டுக்கொடுத்தார்கள், விரகுதலையனு
நற்கீரர்பதினோராங்கட்டுக்குள்ளே அந்தப்
பாயின்மேற்படுத்துக்கொண்டுசொன்ன. *

(வெண்பா.)

சராசரத்தடாயுந்தலைக்கணோலைக்கோலும் *
பராபரத்தமச்சினிமார்பணையும்-விராகுடனே.
யீங்கிவர்கள்செய்யுமியலையுமிவர்நலமும்... *
நீங்காதென்னெஞ்சத்துணின்று ... *

என்றுசொன்னகவியைக்கற்றுச்சொல்லிக ள்போய்த்தமிழறிவாளுக்குச்சொல்ல. அந்த விறகுதலையனைப் பன்னிரண்டாங்கட்டுக்குள் ளழைத்து ஒருஈச்சம்பாயும் ஒருபஞ்சுதலைக ணையும் போட்டுக்கொடுக்கவென்றுசொல்ல, அப்படியேயழைத்துக்கொடுத்தார்கள், அத ன்பேரிலேவிறகுதலையனான நற்கீரர்இருந்து கொண்டுசொன்ன. ... ... *

(வெண்பா.)

குடவன்கடிக்கக்குளிர்வாடைவீசக் ... *
கிடவென்றிடத்தேகிடந்தேன்-மடநல்லார் *
மென்குறங்கைத்தீண்டவிதியிலையாதலின்று *
வென்குறங்கையான்றழுவினேன் ... *

என்றுசொன்னகவியைக்கற்றுச்சொல்லிக ள்போய்த்தமிழறிவாளுக்குச்சொல்ல. நல்லக வீஸ்பரனேயென்றுஎண்ணிக்கொண்டுபதி ன்மூன்றுங்கட்டுக்குள் ளழைத்துக்கொண்டு போய்ஒருநார்க்கட்டிலும்ஈச்சம்பாயுந்தலைக ணையும்போட்டுக்கொடுத்து நம்மிடத்திலே சேவிக்கிறபெண்களிலே அழகுடன் ஜூடும்

பெருமாளைச்சிங்காரித்து அவனிடத்திற்கு அ
னுப்புங்களென்றாள், அப்படியேகட்டிலும்
பாயும்போட்டுக்கொடுத்து அதன்மேலிலவி
றகுதலையனையிருக்கச்சொல்லி அந்தஅழகுட
னும்பெருமாளைச்சிங்காரித்து அனுப்புவித்
தார்கள். அவள்வந்துஎதிரேநின்றாள் அவளைப்
பார்த்துவிறகுதலையனுரைநற்கிரமசொன்ன, *

(வெண்பா.)

தறிபோலுங்குண்டத்தாள் தானவளைப்போ
லே-நெறியாகவந்தென் முன்னின்றாய், செப்பு
விதான். தீரப்பசித்தாலுந் தின்றுப்புல் தின்னு
மோ. நேராகநில்லாதேநீ ... ... *

என்றுசொன்னகவியைக்கேட்டு அவள்தலை
யைபிறங்கிக்கொண்டுபோய் தமிழறிவாளுட
னேசொல்லிக்கொண்டாள் அதும்கேட்டுத்தமி
ழறிவாளும் பதினெண்காங்கட்டுக்குள்ளேய
ழைத்துக்கொண்டுபோய் ஒருகச்சுக்கட்டிலு
ம்ஈச்சம்பாயும்போட்டுக்கொடுத்து நம்மு
டையதாதிகளிலே பிரதமோகினியைச்சிங்கா
ரித்துஅனுப்புங்களென்றுசொன்னாளப்படி
யேகட்டிலும்போட்டுக்கொடுத்தந்தப்பெண்
ணையுஞ்சிங்காரித்துஅனுப்புவித்தார்கள்; அவ
ள்வருகிறபோது விறகுதலையனிடத்திலெரிந்
துகொண்டிருந்தவிளக்கிருண்டெரிந்தது அ
துகண்டுஇவள்போய் அந்தவிளக்கைக்கையா

லேதுண்டிஎண்ணெயைத் தலையிலேதடவிக்
கொண்டாள், அதைவிறகுதலையனான நற்கீரர்
கண்டுஇவள்வீட்டு வெள்ளாட்டியென்றறிந்து
அவளைப்பார்த்துச்சொன்ன ... ... *

(வெண்பா,)

சுள்ளிவிறகுசுமைத்தலையனானுந் ... *
தெள்ளுதமிழாளைச்சேராமட-வுள்ளஞ் ... *
செழும்பாகிலுமினியதேன்சொலாய்கூடேன்
தொழும்பாவுன்னாச்சியுடன் சொல் ... *

என்றுசொன்னகவியைக்கேட்டுஅவளும்
வெட்கித்தலையிறங்கிக்கொண்டுபோய்த்தமிழ
றிவாளுடனே சொல்லிகஸ்திப்பட்டாள், அது
கேட்டுப்பதினைந்தாங்கட்டுக்குள் அழைத்துக்
கொண்டுபோய்க் கட்டில், தூங்குமஞ்சத்தின்
பேரிலேமெத்தைத்தலையணையு மீச்சம்பாயும்
போட்டுக்கொடுத்துநம்முடையதோழிப்பெ
ண்களிலேமதனசேனைக்குத்தன்னுடையவெ
ண்சாமரையும், பொற்சினாங்கியும்பொன்
னின்மிஞ்சியடியும், பொற்பட்டாடையுங்கொ
டுத்துச்சிங்காரித்துவிறகுதலையனிடத்திற்குஅ
னுப்புவிக்கச்சொன்னாள், அப்படியே தூங்கு
மஞ்சம் போட்டுக்கொடுத்து அந்தப்பெண்
ணைச்சிங்காரித்துஅனுப்புவித்தார்கள், அவள்
வந்துநின்றபோது அவளைப்பார்த்துவிறகுத
லையனான நற்கீரர்சொன்ன ... ... *

(வெண்பா.)

ஆடையுடையுமவள்காண் மிதியடியு - மோடிய
ளாசவந்தென்றூன்னின்றுப் - மாடுபோத்-
குண்டனை நான்சேர்வேன்று கோதையர்கள்
செய்திதனைக்கண்டேன்கண்டேனுன் கணக்கு

என்றுசொன்னகவியைக்கேட்டுவெட்கித்தலையிறங்கிக்கொண்டுபோய்த் தமிழறிவாளுடனெசொல்லிமிகவுந்துக்கித்துக்கொண்டாள், அவள் துக்கத்தைமாற்றிஇவன்வந்தகாரணமேதோவென்றுவிசாரமிட்டுக் கற்றுச்சொல்லிப் பெண்களால்மெனைச்சிகளை அழைத்து அந்த விறகுதலையனைப் பதினாறுங்கட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய்த் தம்பாத்திலேசமைத்திருந்தால் சாப்பாடிடுங்களென்றுசொல்ல, அப்படியேயழைத்துவந்து ஒருகல்லாவிலையைத்தைத்துப்போட்டுவைத்ததும்வேகாதுங் கலனும் நெல்லுமாகச்சாப்பாடுகொண்டுவந்துவைத்தார்கள் அந்தச்சாப்பாட்டைப்பார்த்து இவர்கள்வீட்டிலேசாப்பிடாதவரானபடியினாலுஞ்சாப்பாடிருக்கிற திட்டமுங்கண்டு சாப்பிடுகிறபாவனையாகச்சாதத்தின்மேற்கையைவைத்துக்கொண்டு விறகுதலையனைநற்கீரர்சொன்ன. ... ...

(கலித்துறை.)

நெல்லான்மருதடணைலுண்ட பாலேயிட நீண்

டகன்ற-நல்ல த்குறிஞ்சியரியின்வெம்பாலைக்
சலையின்முல்லை; வில்வாபருவத்து வேவினடுங்
கண்ணிநன்மெல்லியலாய் - சொல்லாய்நிலம
ஞ்சுங்காட்டுவநீயிட்டசோறிட்டதே ... *

என்றுசொல்லியிதற்குப்பொருள்சொன்ன

(வெண்பா.)

கல்லொன்றுநெல்லிரண்டுகாணுமனைன் மூன்
றரிசி-கல்லையுடனஞ்சுவகைகாட்டினேன்- வி
ன்னுதலாய்,வல்லபடிசெய்தவகையெல்லாமு
ங்களது, முல்லைநகையாட்குமொழி ....*

என்று இரண்டுகவியுஞ்சொல்லிக் காண்பித்
து அசனத்தையுந்தள்ளிப்போட்டு அப்பாலே
யிருந்தார் அதைக்கேட்டுக் கற்றுச்சொல்லிகள்
போய்த் தமிழறிவாளுக்குச்சொன்னார்கள்-த
மிழறிவாளும்நல்லதென்று அந்தவிறகுதலைய
னைக்கச்சேரிமண்டபத்திற்கு வரச்சொல்லிய
னுப்புங்களென்ன-அப்படியே கற்றுச்சொல்
லிகள் எக்கடத்திகள் வந்து விறகுதலையனைக்
கச்சேரிமண்டபத்திற்கு வாருமென்றழைத்
தார்கள் நல்லதென்று விறகுதலையனு நற்கீர
தேவர்கச்சேரிமண்டபத்துக்கு வருகிறபோ
துபதினெழுங்கட்டுக்குள்ளெசுஸ்திரீப்பிரத
மைகள் இவனை ஆசடியப்பண்ணும்பொருட்
டெதிர்வந்தது அதைக்கண்டு தண்டனேயடித்
தார் அந்தஸ்திரீப்பிரதமைகளெல்லாங்

[illegible]

லைந்துவிழுந்துபோச்சுது அது கடந்துஅப்
பாலேபதினெட்டாம்வாசலிலேபோகிறபோ
துஇரண்டுபக்கத்திலும்புலிகள்சீறிவந்தன,அ
ந்தப்புலிகள்முன்னேசெம்பருத்திப்பூவைப்
போட்டார்-அவைகள் மாங்கிஷமென்றெடுத்
துக்கொண்டுஅப்பாலேபோயின அதுகடந்
துஅப்பால்பத்தொன்பதாம் வாசலிலேபோ
கிறபோது இரண்டுபக்கத்திலுங்கரடிகள்சீறிவ
ந்தன அப்போது காந்தக்கல்லைக்கற்றூணிலே
தட்டினார்அதிலே நெருப்புப்பறந்தது. அது
கண்டுபயந்துஅப்பறம்மோடிபோயின,-அது
கடந்துஅப்பாலே இருபதாம்வாசலிற்போகி
றபோதுஇரண்டுபக்கமும்யானைகள் கெர்ச்சி
த்து- தும்பிக்கையைநீட்டிக்கொண்டெதிரே
வந்தன அவைகள்கையிலேகரும்புக்கணுவை
க்கொடுத்தார்,அதைவாங்கிக்கொண்டு அப்பா
லேபோயின, அந்தவாசத்கடந்துஅப்பாலே
யிருபத்தோராம்வாசலிலேபோகிறபோதுகு
ரங்குசீறிவந்தது அதன்முன்னே கட்டெறும்
பையும் நண்டையும்விட்டார்,அதுகண்டுபய
ந்துஅப்பாலேயோடிப்போச்சுது அந்தவாச
ற்கடந்து இருபத்திரண்டாம்வாசலிற்போகிற
போது,வெட்டைநாய்சீறிவந்தது அதன்முன்
புமல்லிகைப் பூவைப்போட்டார், அதுசோ
றென்றுமுகர்ந்துகொண்டிருந்தது அதுகடந்

து அப்பால் இருபத்துமூன்றாம் வாசலிற்போ
கிறபோது அந்தவாசலில் ஒருகிணறிருந்தது
அந்தக்கிணற்றிலே யிறங்கி அப்பாலே போ
வோமென்றிறங்கினால் சூஸ்திரப்பலகையான
துமேலேமூடிக்கொள்ளுமென்றறிந்து அந்த
க்கிணற்றில் ஒருகல்லைப்போட்டார், உடனே சூ
ஸ்திரப்பலகைகிணற்றை மூடிக்கொண்டது.
அந்தப்பலகையின்மேலேறி அப்புறம்போனா
ர் அந்தவாசற்கடந்து இருபத்துநான்காம்வாச
லிற்போகும்போது அந்தவாசலிற்குங்குமச்
சேறிருந்தது, அப்போது எண்ணெய்ச்சீலை
யையெடுத்துக் காலின்மேல்தடவிக்கொண்டு அந்த
ச்சேற்றிலிறங்கி அப்பாலே போய்க்கரையே
றிக்கொஞ்சநஞ்சம் அங்கங்கே பட்டிருக்கிறசே
றெல்லாம் மூங்கிற்பிளவாலே நன்றாய் வழித்து
ப்போட்டு அங்கே வெள்ளி வட்டிலில் வைத்திரு
க்கிற ஆழாக்குப் பனிநீரையுமெடுத்துக்கொ
ண்டு அதிலே பாதிப்பனிநீரிலே காலைக்கழுவிக்
கொண்டு மற்றப்பாதிப்பனிநீரையுந்தமது பிறகே
சூழ்ந்துவருகிற தாதிகள் கையிற்கொடுத்து இ
ந்தப்பனிநீரைக்கொண்டுபோய் உங்கள் நாச்சி
யார் தலையிலேயூற்றுங்களென்று சொல்லி அந்
தவாசற்கடந்து இருபத்தைந்தாம் வாசலுக்கு
வருகிறபோது அங்கே சித்திரமண்டபத்திற்
பாரதஇராமாயணம் மற்றுமுண்டான கதாப்

பிரசங்கங்களெல்லாம் எழுதியிருந்தன, அவைகளைப்பார்த்து நாமிங்கே வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருந்தால் பொழுதுவிடிந்துபோகுமென்று நினைத்துச் சீக்கிரமாகப் போகச்சே பிறகே வருகின்ற மௌனச்சிகள் பிறகுதலைவனைப்பார்த்து இந்தசித்திரங்களிருக்கிறவிநோதங்களைப்பாரும்பாருமென்று சொன்னார்களதற்குவிறகுதலையனான நற்கீரர் சொன்ன

(வெண்பா,)

கலைகாட்டுந்தோகைக்கருஞ்சக்கரத்தின் ...*
வலைகாட்டியாயிரம்பொன்வாங்கிக்- கலைநெகிழ்க்-குத்திரமாய்த்தேடுங்குறிபோலிருந்தச்-
சித்திரமுஞ்செய்யுஞ்செயல் ....*

என்று சொன்னகவியைக்கற்றுச் சொல்லிநள்போய்த்தமிழறிவாளுக்குச்சொல்லத்தமிழறிவாளுஞ்சந்தோஷப்பட்டுச் சீக்கிரமாக அழைத்துவாருங்களென்ன அப்படியேயழைத்துவருகிறபோது இருபத்தாறும் வாசலிலேநீரழிபண்டபமுண்டு அதற்குமிகப்புப்போட்டுக்கொண்டுபள்ளமறிந்துகரையேறிப்போனார், அதிகடற்று அப்பாலே போகிறபோது இருபத்தேழும் வாசலிலேபளிங்குமாமண்டபத்தில் பாவைகளிருந்த மண்டபத்தின்மேலே செய்துவைத்திருக்கிறசித்திரங்களைப்பார்த்தால்கீழெமாற்சறுக்கிவிழுவான் அப்படி விழாம

ல்வுபாயமாகக்கடந்துபோய்அப்பால் இருபத்தெட்டாம்வாசலிலே தமிழறியுமண்டமுங்கடந்துஇருபத்தொன்பதாம்வாசலிலே இயலறியுமண்டபமுங்கடந்து அப்பால்முப்பதாம்வாசலிலே இசையறியுமண்டபமுங்கடந்துஅப்பால்முப்பத்தோராம்வாசலிலேகூத்துப்பார்க்கிறமண்டபத்திற்கோழிச்சேவல்போரும் ஆட்டுக்கடாய்பாய்ச்சலும்இப்படியாக அநேகவினோதங்களிருந்தன அந்தமண்டபத்திலே கூத்தாடுகிறதும்மத்தளதாளம்போட்டுக்கொண்டுநாடகசாலைப்பெண்களுக்கூத்தாடிகளும் இவருக்கெதிரே பஞ்சிபண்ணிக்கொண்டு ஆடவந்தார்கள் இந்தவேடிக்கையைப்பார்த்துக்கொண்டிருந்தால் பொழுது வெடிந்துபோகும், ஆனபடியால்வந்தகாரியமாகவேணடுமென்று அவர்களைப்பார்த்து உங்களாட்டமும்நானேபார்க்கிறவன் உங்கள் நாச்சியாரேபார்ப்பாளென்றுசொல்லி அவர்களுக்குத்தியாகங்கொடுத்து அதுகடந்து அப்பால் கச்சேரிமண்டபத்துக்குப்போகிறபோது தாதிகள்போய்த்தமிழறிவாளுடனே இந்த முப்பத்தொருவாசலுங்கடந்துவந்தானென்றுசொல்லக்கேட்டுத்தமிழறிவாளுஞ்சந்தோஷிப்பட்டு இத்தனைக்கட்டுக்காவலனைத்தையும் கடந்துவந்தபோதேஇவன்தேவனேயென்று அந்தமண்டபம்வி

டுத்தன் னரண்மனையேபோனாள்-நற்கீரரும்
அந்தக்கச்சேரிமண்டபத்துக்குவந்தார் அந்த
மண்டபமெப்படியிருக்கிறதென்றால் அறுப
த்துநான்குகால்பொற்றூணிறுத்தி மண்டப
ஞ்சோடித்து அந்தமண்டபத்துக்கு நவரத்தி
னத்தினாலும்பட்டுபட்டாவளிசீனிச்ஞம்பாரத்
தினாலும்அலங்கரித்து அதிலேமயில்களாடவும்
குயில்கள்கூவவும், அன்னங்கள் நடந்துவிளை
யாடவும், பஞ்சவர்ணகிளிகள் கொஞ்சி சொஞ்
சிப்பேசவும், வண்டினம்பாடவும். தென்றல்
வீசவும், மேற்கட்டுங்கட்டி சூஸ்திரப்பிரதமை
கள் முப்பத்திரண்டு வகைமேளவாத்தியம்ப
ண்ணவும், சாம்பிராணிதூபமும், மல்லிகை.
முல்லை, ஜாதிபுன்னை, மருக்கொழுந்து இப்ப
டிக்கொற்றபரிமளதிரவியங்களுங் கமகமவெ
ன்றுபரிமளித்துக்கொண்டிருக்க இப்படிநா
னாவிதமான அலங்காரமாயிருக்கப்பட்டகச்சே
ரிமண்டபத்தில்களிற்றி யானைத்தந்தக்கட்டிலு
ம். பெட்டையானைத்தந்தக்கட்டிலும். நவரத்
தினகசிதமாகச்சோடித்து இரண்டுகட்டிலுஞ்
சோடாகப்போட்டிருக்கின்றது. இந்தப்புது
மைகளையெல்லாம்பார்த்துநற்கீரதேவர் அதிசய
ப்பட்டு இத்தனைக்குவல்லவனாணடியினாலே
இத்தனையாடம்பரபரிவட்டணை யகங்காரவலு
மையினாலேதனக்கொருவருமெதிரியில்லையெ

ன்றுவிருதுகூடிக்கொண்டிருக்கிறாள். இவளை வெல்லுகிறது அருமையாமென்றுவிசாரப்பட்டு ஆனாலென்ன நம்முடையகுருவாகிய சுப்பிரமண்ணியக்கடவுள் பாதாரவிந்தமே துணையென்று அந்தகட்டிலண்டைக்குவந்து கட்டிலைப் பார்த்து அதிசயப்பட்டு இந்தக்கட்டிலிரண்டையும்பெண்கட்டில் ஆண்கட்டிலென்றுபிரித்தவிபரம்தமதுளகையினாலே ஒருகட்டிலைநெருக்கியிருத்திப்பார்க்கத்தளர்ந்திருந்தது இது பெட்டையானைத்தந்தக்கட்டில் பெண்கட்டிலாமென்றறிந்து அதுகால்மாடுதலைமாடுதெரியாமலிருந்தபடியினாலே அது அறியவேண்டித்தமதுலகையிலிருந்த எலுமிச்சம் பழத்தையெடுத்து அந்தக்கட்டிலின் நடுமையத்திலே வைத்தார் அது உருண்டுபோய்க்கால்மாட்டில் நின்றது - அதுகண்டு கால்மாட்டிற்சூஸ்திரப்பிரதமைகளுந்தலைமாட்டிலே நிலைகண்ணாடியுமிருக்கிறது இலட்சணமாமென்றறிந்துகொண்டு அந்தக்கட்டிலின்பேரிலேறி ஒருகந்தையைவிரித்துப்போட்டுப்படுத்துக்கொண்டார். - கட்டிலிலேபிரதமைகள் கட்டியிருந்தபடியினாலே மேற்படி சூஸ்திரப்பிரதமைகளெல்லாங்கால்பிடிக்கவுங்கைபிடிக்கவும் உடம்புபிடிக்கவும்மயில்விசிறியெடுத்துவிசிறவுங்கண்ணாடியெடுத்துக்காட்டவும்அவன்சாமனா

யெடுத்துவீசவும்,இப்படியாகப் பிரதமைக
ளெல்லாம் பணிவிடைசெய்பத்துக்கதாக விற
குதலையனுன நக்கீரதேவர் படுத்துக்கொண்டி
ருக்கிறதைக்கண்டு நெற்றுச்சொல்லிகள் முதலா
னபேரும்ஆச்சரியப்பட்டுத் தமிழறிவாளுட
னேசொன்னுர்கள், அவளுங்கேட்டுவிசாரப்ப
ட்டுபின்புமனந்தெளிந்துகொண்டுஇவல் உத்
தமனென்கிறதற்குச்சந்தேகமில்லைஇப்படிக்
கொத்தவித்துவானைச்சேர்ந்தாலுந் தோஷமி
ல்லைமோட்சமுண்டு ஆனாலுமிவனுடையதிற
மையையின்னும் பார்ப்போமென்று தன்
னுடையதோழியானஇயலறியும்பெருமாளை
ரவழைத்து அவளுக்குத்தன்னுடையஆபர
ணங்களையெல்லாம் பூட்டிச்சிங்காரித்துவெகு
ஆடம்பரத்துடனேயனுப்பினுள்? அவளுந்த
மிழறிவாள் வடிவமாகவந்துநின்றபோது அவ
ளைப்பார்த்துஇவள்தமிழறிவா ளல்லவென்று
மனதிலெண்ணிக்கொண்டுவிறகுதலையனுனந
க்கீரதேவர்சொன்ன (வெண்பா)

முத்துநகையுமுதின்முலையு மென்ஞானச் ✕
சத்திசிவம்போலத்தாதியரா. மெத்தெலவர் ✕
தன்புருக்சாரி நெஞ்சத்தவிருக்கநீர்வரவேன் ✕
பொன்சிலம்புசிற்றடியாய்ப்பாம் ✻

இப்படியாகச்சொல்லக்கேட்டுஇயலறிவாளு
ம் நீயின்னைத் துஷணித்தாலும் நல்லதுவெகு

மானமாய்ப் போவென் நீயே அதுவேபோது
மென்றுசொல்லிப்போய்த் தமிழறிவாளுட
னேசொன்னாள் அதுகேட்டுத்தமிழறிவாளும்
இனிமேல்யானையனுப்பினாலும் ஆகிறதில்லை
நாமேபோகவேண்டுமென்று தாயானமரகத
வடிவினையழைப்பித்துச்சொல்லுவாள் விர
குதலையனிடத்திற்கு நாம் ஆனையனுப்பினாலு
மவர்களைத்தாக்ஷிணித்து ஓட்டிவிடுகிறானே இ
னிநானவனிடத்திற்குப்போகவேணுமென்று
கேட்கமரகதவடிவிசொல்லுவாள்விரகுதலைய
னனேதது அவனிடத்திற்கு நீபோகிறதேது இ
தென்னமாயிருக்கிறது நீயுமிதுவரைக்குந்தமி
ழறிவாளென்றுபேர் பெற்றுஉனக்காருமெதி
ரில்லை மகீர்த்திபடைத்தாய் இப்போதும்வந்
தவனுக்கு ஏற்றசமர்த்து ஆராய்ந்துசொல்லிக்
கொண்டு சிறுக்கிகளையழைத்து அவன்முன்
னேகேளிக்கையாடச்சொல்லிவேடிக்கைப்பா
ர்ப்பித்துபொழுது விடியப்பண்ணி யினிச்ச
வாய்ப்பித்தாமோசம்போனேயென்று அடி
த்தோட்டிவிடுகிறதேயல்லாமல்இந்தவிரகுத
லையனைக்கூடவிதியோமகளேம்போகவேண்டா
மென்றாள் அதுகேட்டு தமிழறிவாளுந்தாயா
னமரகதவடிவிக்குச்சொல்லுவாள்வந்தவனெ
ங்கேயாகிலும்மோசம்போனாலல்லவோ அடி
த்து ஓட்டிவிடலாம் நல்ல இலட்சணமதிந்தவ

னுமாய்மகத்தானவித்துவானுமாய்க்கட்டுக்கு
க்கட்டுகவிசொல்லிக்கொண்டுவந்தசமர்த்தை
யுமறிவாய் இப்படிநம்மிலும் வல்லமையான
வனை நம்முடையவலுமையினாலே அடித்துத்து
ட்டிவிட்டால் பூமியிலும் அபகீர்த்திக்கிடமாகு
ம்இவனும் வசைகவிபாடிப்போடுவான் இது
காரியமல்லவென்று தாயான்மரகதவடிவிக்கு
த்தமிழறிவாள்சொல்லிக்காண்பித்த ... *

(வெண்பா)

கல்லாவொருவன்றோள்சேர்தலினுங்கற்றவ
னோடல்லற்படுவதழகன்றோ சொல்லாய்க் *
கரும்பிரசங்கைக்கும்மாகல்வியறிகோதாய்- *
விரும்புவரோவேம்பின்கனி ... ... *

என்றுசொல்லிக்காண்பித்தவுடனே தாய
னமரகதவல்லிசம்மதித்து நல்லதும்பாவென்
ன்றுசொன்னாள்- அதன்பிறகுதான் போய்ச்ச
லக்கமனேபுகுந்து பச்சிலை பசுமஞ்சளாத்து
ஜலக்கமாடிதான் பூண்டுகொண்டிருந்த ஆபர
ணங்களையெல்லாங்கழற்றிப்போட்டு கண்ணு
க்கு மையிட்டுக்கொண்டு, சந்தனம்பூசிக்கொ
ண்டு; நெற்றிக்குத்திருநீறுங்கஸ்தூரிப்பொட்
டுமிட்டுக்கொண்டு - தாதிகளிடப்பட்டவுட
மைகளிட்டுக்கொண்டுஇன்னத்தன்னையறியா
மலிருக்கவேண்டுமென்று முன்னாலே போய்
வந்த இசையறியும்பெருமாளைத்தானே முக

னையாய் அலங்காரம்பண்ணிக்கொண்டு திரு
ம்பவும்வந்தாளேயிவள்தான் தமிழறிவாளெ
ன்று அவள் மனதிலெண்ணவேண்டுமென்
று நினைத்துவெகுஆடம்பரமாகமேளதாளங்க
ளுடனேகட்டியக்காரிகள் எச்சரிக்கைசொல்
லஇசையரியும்பெருமாளைமுன்னே நடத்திக்
கொண்டுதானவளுக்கு அடப்பைக்காரியைப்
போலபுறமேகேநின்றுவெற்றிலைமடித்து நீட்டி
நீட்டிக்கொடுத்துக்கொண்டு வருகிறவளுடை
ய இலட்சணத்தைப்பார்த்து முகமிருக்கிற
வொளிவும்பார்க்கிறபார்வையும்,இவளுடைய
ரூபாதிசயமும்,அவளுடையநடையினொளிவு
ம்,பிடிபிலடங்கும்இடையும்மூன்றாம்பிறைச்
சந்திரனைப்போலேயிருக்கிற அவளுடையமு
கப்புருவத்தினழகையும்பார்த்து இவளேதமி
ழறிவாளாகவேண்டும்தன்னாபரணங்களையெல்
லாங்கழற்றிப்போட்டுமாறுபாடாகவருகிறது
ங்கபடமாயிருக்கிறதென்று தமிழறிவானைப்
பார்த்துத்தூஷணித்துப் பாடவெழாமல்விற
குதலையனை நற்கீரர்சொன்ன (கலித்துறை)
கருகவிழித்தவிழிக்கணையால்வெய்யகாமனைய
ன்-றுருகவிழித்தவிழியிதுவோவிங்குவமையி
ல்லாக்-குருகுபதத்திளங்கொங்கையின்னுளி
டைக்கூடவின்று-பருகவிதித்திலனேவெய்ய
காமட்டிதனக்கே,...........

என்றுசொன்னகவியைக்கேட்டுத்தமிழறி
வாளும் இவன் நம்மைப்பார்த்து அறிந்து சொ
ன்னா இத்தனை புலமையிட்டுப்பாடினானென்று
சந்தோஷப்பட்டு அதிசீக்கிரமாக பெட்டை
யானைத்தந்தக்கட்டிலின்மேலிருக்கையாக வ
ந்த இசையறியும்பெருமாளை உயரவைத்துத்
தான் கீழேயிருந்துகொண்டு வெற்றிலைமடித்
துக்கொண்டிருந்தாள் அதுகண்டு விருதலை
யனான நக்கீரதேவரும் இப்படி கபடமார்க்க
மாக வெற்றிலைமடித்துக்கொண்டிருந்தால் எ
னக்குத்தெரியாதோவென்றுமனதிலெண்ணி
க்கொண்டெழுந்திருந்து வெற்றிலைப்பாக்கு
கையிலெடுத்துக்கொண்டுவந்து வெற்றிலைம
டித்துக்கொடுத்துக்கொண்டிருக்கிறவள் கை
யிலேகொடுக்கப்போனார் அதைத்தமிழறிவா
ள்கண்டு இவன் நம்மையறிந்தல்லவோ நம்மு
டையகையில் வெற்றிலைப்பாக்குகொடுக்கவரு
கிறானென்றெண்ணிக்கொண்டு அவர்முகத்
தையேறப்பார்த்துத் தமிழறியும்பெருமாள்
சொல்லுவாள் நானொருகவிசொல்லுகிறேன்
அந்தக்கவிக்குப்பயன்சொன்னீராகில் உம்மு
டையகையில்வெற்றிலைப்பாக்கு வாங்குவே
ன் இல்லாமற்போனால் வாங்கிறதில்லையென்று
சொன்னாள், அதற்குநக்கீரதேவர்சொல்லுவா
ர் நீசொல்லுகிறகவிக்குப்பயன்சொன்னாலாகு

றுசொல்லாமற்போனல் உனக்குஆறுமாதம்
ஊழியம்பண்ணுகிறேன் ஒருவேளை நீதோர்த்
தால் என்னமாகிறது சொல்லும்பெண்ணே என்
றார், அதற்குத்தமிழறிவாள் சொல்லுகிறாள் ஒரு
வேளை தான்தோர்த்தேனேயாகில் தேவரீர் சொ
ன்னபடிக்குகேட்கிறேனென்றாள், அதுகேட்
டு நற்கிரர் ஆனல்நீசொல்லுகிறகவியைச்சொ
ல்லும்பெண்ணேயென்றார் அப்போது தமிழ
றிவாளும் இரண்டுகட்டிலுக்கும்நடுவே பூந்தி
ரையிடுவித்துத் தமிழறியும்பெருமாளென்கி
றவேஷித்துக்குண்டான ஆபரணங்களையெல்
லாம்பூட்டிக்கொண்டுபட்டுப்பட்டாவளி யுடுத்
திக்கொண்டு அளகத்துக்கு முல்லையணிந்து
கைக்குப் புனுகுசவ்வாதணிந்துக்கொங்கைக்
குக்குங்குமகஸ்தூரியணிந்துமார்புக்குக்கண்
டசாம்முத்துமாலையணிந்து, காதுக்குக்கொ
ந்தளமணிந்து, கைக்குஅஸ்தகடகமிட்டுகாலு
க்குச்சிலம்பணிந்து, அரைக்குஒட்டியாணம
ணிந்துஇசையறியும்பெருமாளை அரண்மனைக்
கு அனுப்பிவிட்டுத்தான்கட்டிலின்மீதிருந்து
கொண்டு ஆலவட்டம்வீச, உபயவெண்சாமரை
வீச, சர்வபூஷிணாலங்கிர்தமாக இருந்துகொண்
டுவிறகுதலையனை நற்கிரதேவருடனேவாக்கு
வாதம்பண்ணின (வெண்பா)

ஐம்பஞ்சிருபத்தஞ்சோரிரவே யான்பெறினு

ம், வெய்யமதனைந் துக்கணைமேல்வரினுந். தை
யலாள், கைடஞ்சறியாதகாளைதோள்சேர்வ
ளோ, மெய்யஞ்சறப்பெற்றமீன் ... *

என்றுசென்னகவிக்குநற்கீரர்தன்னண்டை
யிலிருந்தஅஞ்சறைப்பெட்டியைத்தட்டிக்கா
ண்பிக்க அதற்குத் தமிழறிவாள் இதுயூகிபா
ஷையைப்போலிருக்கிறது தெரியச்சொல்ல
வேண்டுமென்ன, நற்கீரர்பொருள்விடுவித்த
விபரம் ஐயஞ்சிருபத்தஞ்சாவது, காடுபடுவத
ஞ்சு-கடல்படுவதஞ்சு நாடுபடுவதஞ்சு-நகர்ப
டுவதஞ்சு-மலைபடுவதஞ்சு-இவைகளுக்குப்ப
யன். காடுபடுவதஞ்சாவது அரக்கிரளிசெந்தே
ன் அணிமயிலின்பீலிதிருக்கற்றநாபியோடை
ந்து. கடல்படுவதஞ்சாவது, ஒங்குவளைசங்குஒ
ளிபவளம்வெண்முத்து பாங்கரிய வெள்ளுப்
போடைந்து, நாடுபடுவதஞ்சாவது-செந்நெ
ற்சிறுபயறுசீராருஞ்செவ்விளநீர் கன்றகதலி
யோடைந்து-நகர்படுவதஞ்சாவது- கண்ணு
டி-பித்தன்-கருங்குரங்கு-காட்டானை-மன்ன
னும்வேந்தனோடைந்து - மலைபடுவதஞ்சாவ
து-மாணிக்கம்பச்சை-வயிடூரியம்-நீலம்அணி
க்கனகமோடைந்து, கனையஞ்சாவது-முல்லை-
யசோகு-முழுநீலஞ்-குதப்பூ - அல்லிமுளரி
யோடைந்து-கையஞ்சாவது அண்ணலெழுதலி
லைகிள்ளல்-பூத்தொடுத்தல்பண்ணைமைந்த-ஆ

ழியோடைந்துமெய்யஞ்சாவது கொட்டாவி
நெட்டை-குறகுதப்பை-கூன்குருடு.நட்டுவி
ழுதலோடைந்து, இப்படியென்று நக்கீரர்
பொருள்விடுவித்தபின்புபின்னுந்தமிழறிவா
ள்சொன்ன, (வெண்பா.)

பாய்ச்சிமறிந்திடுவார் பாதமேநன்குடையார்
வாய்ச்சகலம்புகுந்துவாழ்ந்திருப்பார் வீச்சி-
படையாணர்தங்களுக்கும்பாரின்மேற்காணு,
அடைமாவுமல்லவது .... *

என்றுசொன்னகவிக்கு நக்கீரர்பொருள்
சொன்ன [வெண்பா.]

கம்பைபலவைச்சுடியிற்கால்கணொருநான்கு
ளதாய்ப் - பைம்பொற்களமேறியாச்சுதலா-
லெம்பெரிய, மாவல்லநல்லமாக்காலேமாநில
மன், பூவலருங்கோதாய்ப்பொருள் ... *

என்றுபொருள்விடுவித்துச்சொன்னபின்
புதமிழறிவாள்பின்னையுஞ்சொன்ன.

(சந்தவிருத்தம்)

அங்காடிகொள்ளப்போயானைகண்டேன்... *
அணிநகரமன்றியிலேசேனைகண்டேன் ... *
கொங்காளுமுத்தரசர் தம்மைக்கண்டேன் . *
கொடித்தரும்பரிமாவுங்கூடக்கண்டேன் *
அங்கிருவரெதிர்நின்றுவெட்டக்கண்டேன் *
அதுகண்டியான்றலையைத் தாழ்த்தநுற்றேன்
இங்கிதனையின்னதென்றியம்புவார்க்கே... *

எதிரிலிலைப்புவிக்குளென்றனரே ... *

இந்தக்கவிக்குநற்கீரர்பொருள்சொன்ன

(சந்தவிருத்தம்.)

எதிரங்கமன்றியிலேயேறக்கண்டேன் ... *
எழுகதியதேர்மாவுமனிதர்கண்டேன் *
அதிரங்கமாயிருவராடக்கண்டேன் ... *
அவ்விருவரெதிர்நின்றுவெட்டக்கண்டேன் *
சதுரங்கமிதுகாணும்வேறொன்றல்ல ... *
தார்குழலேநீதலையைத்தாழ்த்ததேனோ ... *
விதிரங்கமுடையதொருமானேகேளாய் ... *
வீணருக்கும்வேந்தருக்கும்வேலைதானே ... *

என்றுபொருள்விடுவித்தபின்புபின்னையு ந்தமிழறிவாள்சொன்ன. (கவி.)

அக்கரமுமெழுதவொண்ணுவாய்மையாளர் *
ஆவின்பின்னேதிரிவாரதுவுமன்றி ... *
சக்கரமும்வலம்புரியுந்தரித்தேநிற்பர் ... *
தாருவிற்கட்டுண்டுதயங்கநிற்பர் ... *
மிசுகதொருவடம்புனைவர் வெண்ணெய்யாடி
வெற்பெடுத்துமற்பொருதுவேலைசூழ்வர் *
திக்கெட்டும்புகழ்படைத்ததேவேகேளாய் *
திருமாலுமல்லவிது செப்புவீரே .... *

இதற்குநற்கீரர்பொருள்சொன்ன

(கவி.)

குன்றுசமொழியுடையவாய்மையாளர் ... *
கோவின்பின்றிரிவர்கோபாலரல்லர் ... *

[illegible]

ஒன்றாகக்கடல்கடைந்து வெண்ணெய்யாடி *
யுரலோடேகட்டுண்டியுழலாநிற்பர் ... *
மன்றாடிமலையெடுத்துமல்லுப்பூந்து ... *
மற்பொருதிவெற்பெடுத்துக்கொக்கிப்பூண்பர்
சென்றுதிருமறையூரிற்றேனேசேளாய்த் ...*
திருமாலுமல்லவிதுசெக்குத்தானே ...*

என்றுபொருள்விடுவித்தபின்பு பின்னையுந்
தமிழறிவாள்சொன்ன

(கவி.)

படிமுழுதந்தரித்தங்கேமன்றுள்ளாடி ...*
பத்தருமுத்தருமங்கேபரிந்துநாடி ...*
திடமுடையநான்முகனுமரியுந்தேடித் ...*
தேவரெல்லாம்போற்றரியதிங்கள்சூடி ....*
வடமணியுமாலைமயவாசகம்போல ...*
வடிவுடையதிருமேனிசழும்புபட்டுப் ...*
படிமுழுதுமாளுவிக்கும்வல்லர்தாமே ...*
பரமனார்தனுமல்லபகருவீரே ... ... *

இதற்குநக்கீரர்பொருள்சொன்ன

(கவி.)

வடிவுடையார்பிறையணிவார்வணிகரெல்லாம்
பிடிபடுவார்நாடோறும்மனிதர்காண ...*
அடிபடுவார்திருமேனிதழும்புமேற்பார் *
அப்பமையிலார்தகவாற்வரவுமன்றிக் ...*
குடியினுடன்மன்னர்சங்கள்கூடன்னேநிற்பர்
கூற்றனைவருடவளையாத்துவிப்பார் ....*

படிமுழுதுமாளுவிக்கவல்லர்தாமே ....*
பரமனார்தாமும்பல்லணத்திலுமோ ....*
என்றுசொல்லக்கேட்டுப்பின்னையுந்தமிழறிவாள்சொன்ன. (கவி,)

கட்டியவன்கரையார்காலபலவேயுடையார்-*
இட்டிதோர்மடுதனிலேயெய்தியதாமரையுங்-
கொட்டியுநெய்தலுமேகூடவுலைத்திடுமே*
யிட்டதமிழ்க்கரசேயேரியுமல்லவிது ... ...*

இதற்குநற்கீரர்பொருள்சொன்ன
(கவி.)

கால்வழியேநாலோடிக்கரைகள்சேர்த்துக் *
கற்பாசப்புல்விட்டுக்கஞ்சிவைத்துப் ......*
பூவலரும்நெய்தலுடன்கொட்டியிட்டுப்...*
பொருத்தியேதாமரையும்பூத்தேநிற்பர் ...*
வேல்பொருதுங்கண்ணாளேயேரியல்ல ......*
மேகமென்றேயிதனைவிளம்புவாரோ......*

என்றுசொல்லக்கேட்டுப்பின்னையுந்தமிழறிவாள்சொன்ன, (கவி)

கானகத்திருந்துபோந்துகைகளாற்சுத்தமூண்டு- நானைக்கூடத்தன்னிற்றண்டனிற்குமாடி- மேனியிற்றவளங்கொண்டுவீதியில்வருவாரங்கே. ஆனையுமல்லகண்டீரதிந்திடராசர்கோவே] என்றுசொல்லநக்கீரர்பொருள்சொன்ன
(கவி,)

நானம்போற்கூடத்தன்னிற்றன்னைகயிற்குத்து

மூண்டு. தேனுடன் பாலுநெய்யுந் தெவிட்டந
ல்லமுதுசெய்யும், மான வேல் விழியினாளேமா
நிலத்தோர்கட்கெல்லாம், ஆனையுமல்லகண்டீ
ரருங்கல்லேதானேயென்றார் ... ...*

என்றுசொல்லக்கேட்டுப் பின்னையுந்தமிழ
றிவாள்சொன்ன (வெண்பா)

அக்கடா போகக் கண்டாறிரண்டிலொன்றையு
ண்-டிக்கடாவீடா யிருப்பாளை; யொக்கிடா-*
ஒன்றார்புரத்தை முனிந்தாரே யந்நாளில்...*
மூன்றுங்கி லொன்றுடையான்முன் .. ...*

என்றுசொல்ல இதற்குப்பாண்டியன் முன்னே நரியைப் பரியாக்கினதென்று நக்கீரர் பொருள்விடுவித்தார்பின்புதமிழறிவாள்மறுபடியுஞ்சொன்ன (கலி-

நீரிலானவைதானதுமூன்றுள ... ...*
நெடியகானில்விளற்கொருமூன்றுள ... ...*
ஊரிலாடவும்பாடவுங்கொட்டவு ....*
மொன்றிலொன்றெருபேதையாமெனச்*
சேரவாங்குதனுடன்கூடியே ....*
தெற்குமாமுனிதன்னையுமாகவே ... ... *
பாரின்மீதறிவில்லவர்க்கிது ... ...*
பன்னிரண்டுவருஷம்பகருமே... ... .. *

இதற்குநக்கீரர்பொருள்சொல்லுவார்- நீரில்மூன்றுளது-மகரம்- மீனம்- சற்கடகம், கானில்மூன்றுளது- மேஷம்ரிஷபம்சிங்கம் ஊரில்மூ

ன்றுவது-ஆடுவதுதுலாம் பாடுவதுமிதுனம்
கொட்டுவதுதேள் பேசையாவதுகன்னி.தனு
சாவதுவில், தெற்கு மூனியாவது கும்பமென்
றுசொல்லப்பின்னுந்தமிழறிவாள் சொன்ன,

(வெண்பா,)

வாருவார்கூடுபுகுவர்வாட்கூட்டிநிற்பர் ....*
பாலில்லாந்தாமரைபரிந்திருப்பார்-நீரிற் ...*
சுழித்தெழுபாலித்துறைநாடாசொல்லா ...*
மெழுத்தாணியல்லவிது ..*

இதற்குநக்கீரர் பொருள்சொன்ன.

(வெண்பா.)

வாருவார்கூடுபுகுவர்வாய்கூரப்பாரத்து ...*
பாலில்லர்ந்தாமரைபரிந்துழல்வர்-சீலொல்லாங்
கச்சிருக்குங் கொங்கைக்கனங்குழையீர் கார்வ
ண்ணன், நித்திரையாயினீர்காணிதுப்பு ......*

பின்னுந்தமிழறிவாள்சொன்ன

(வெண்பா.)

[ஐயஞ்சுபாணந் தொடுத்தான்வெளிப்பொ
ழுந்த - பெய்யஞ்சுவிட்டானு மியான்வேண்
டேன்.மெய்யாகக் - கையஞ்சுடையான கதிர்
மூசத்திலொன்றுடையாள் - மெய்யஞ்சுடை
யான்வினம்பு] இதற்குநக்கீரர்பொருள்சொ
ன்ன,

(வெண்பா.)

நினைக்குடரவிர்த்தநீள்பசலைக்குதம் ... ...*
ஆனைத்துணைர் வுமாற்றமம்சாகத், தனிக்கு

ந்து,முல்லை இடைகாட்டுமானேமுழுநீலங் *
கொல்லு மதனம்பின்குணம் ... ... *

என்றுசொன்ன தகைஞ்சுடையாளுவது, தெறிவன்மை. இறுதியின்மை.நெருப்புக்கு நிறுன்மையோடைந்து. கதிர்முகத்திலென்றுவது, சூரியனைப் போலே ஒளியுடையமுகமென்பது. மெய்யஞ்சுடையாளுவது,சோம்பல் நடைநெட்டை-யுடல் முறித்தல்-வெம்பி-சுற்றுழையோடைந்து- என்றுசொல்லித்தமிழறிவானைப்பார்த்து நக்கீரர் சொல்லுவார் நீசொன்னகவிகளுக்கெல்லாம் நான்பயன்சொன்னேனேயினிநானொருகவிசொல்லுகிறேன் அதற்குநீ பொருள்சொல்லென்று தமிழறிவானுக்குநக்கீரர்சொன்ன, *

(வெண்பா)

பஞ்சவர்கள்பேருவடிவுவர்குணமுந் .. *
தஞ்சமுடனேயதனைச் சாற்றவே நெஞ்செதி
ரோ-யின்னவகையினடை வகுடவேயிததனையு
ஞ்-சொன்னார்புலவர்தொகுத்து ,........*

இதற்குத்தமிழறியாள் பொருள்சொன்ன விபரம்-பஞ்சவர்கள் பேராவது.பிருதிவு.அப்பு,தேய்வு.வய்வு,ஆகாசம்,வடிவாவது-மெய்-வாய்-கண்-மூக்கு,,செவி,குணமாவது; சத்தப்பரிசம்-ரூபம்ரசம்,கந்தம்.உணர்வாவது,காண்டல்-கேட்டல்,உண்டல்,உடுத்தல்- உயிர்த்த

லென்றுசொல்லிப்பின்னையும் நக்கீரர்சொன்
ன.] .... (கலி)
படிதனையிறுகப்பற்றிப்பருநிலமதிரக்கு
த்தி-பட்டதனையன்றுபாச்சியங்கையும்புக்கிநி
ன்று-கொடிபலசூழ்தலாலுங்குழுமியவளை
த்தலாலும்வடிவுடைமதேர்களாய் மதகரிய
ல்லகண்டீர் ... ... *

என்றுசொல்லிதமிழறிவாள்பொருள்சொ
ன்ன,] (வெண்பா)
சாற்றல்விளைவாகுந்தாரணியின் மீதினிலே *
மாற்றலரைவெல்லவகையுளதோ,செற்றுநிம் *
ஆற்றுமையாலித்தவம்மடுவிற்றுன் கவிழ்க்கு
ம்-ஊற்றுமேலேகாணீருகந்து ... ... *

என்றுசொல்லித்தமிழறிவாள் விறகுதலைய
னைப்பார்த்துச்சொன்ன *
(வெண்பா)
மன்னுந்தலைக்குரியவல்லீரோயாமாகிற் ... .. *
பண்ணும்விறகுதலைப்பாவலரோயின்னமுநீ *
சொல்லுதியோவென்றுரைப்பச்சொல்லுவே
ன்சொல்லுமென்றாள் - வல்லமையாற்செந்த
மிழின்மான் ... . *

என்றுசொல்லினவுடனேவிறகுதலையனை
நக்கீரர்சொன்ன, (கலி,)
ஞாலமிகுத்திருக்கும்நல்லகரியமேனி..... *
நானிலத்திலறியாததேசமில்லை .... *

காலு மாண்டுகாசினியில்நடக்கமாட்டார் ...*
கருதரியசிறகுமில்லைபறந்தேபோவார் ...*
சீலமுடன்மைந்தனையும்பெறுவார்கண்டீர்*
சிந்தகிதர்வந்தடுப்பார்கள்சேரவொட்டார் *
ஆலமுண்டகண்டத்தாரருளினாலே ...*
ஆராய்ந்தேயிப்பொருளையறைந்திடாயே-*
என்றுசொல்லத்தமிழறிவாள்பொருள்சொ
ன்ன] (கவி.)
தேங்குபாலிலுப்பையபுன்னைவடவாலத்தி ...*
செய்யுமாதனைகொய்யாதின்றேசாலத் ...*
தாங்குவரிக்கோபுரங்கள்சாலைசோலை ....*
சாளரங்குதிருக்கோயிற்றருவிருக்கும் ...*
ஆங்கிலணிடணியாசவின்ங்களோடும் ...*
அணிதோப்புக்காவணங்களடுத்துவாழும் *
மாங்கனிக்குத்தூங்குதலைகீழாய்நிற்கும் ...*
வவ்வாலென்றிதன்பேரைவகுக்கலாமே ...*
என்றுசொல்லப்பின்னும்நற்கீரர்சொன்ன
(கவி)
படைதனிற்சென்றவையுருளத்தொலைத்து
நேரெ,பாவலரையுறுக்கவென்று;படையேகூ
ட்டுங்-குடமுடைய பெரிதான குதிரையேறு-
கோட்டைகொள்ளுங்கொக்கரிக்குங்கொள்ளை
யாடும்.அடலுருவவேவெறிந்தபகையைத்தீர்
தம், ஆராளிபுவியாளுமாற்றுனல்ல-விடை
..க்கசிவனருளாற்றெரிந்துநின்றுப், விம

ரிலசயார்யிக்கவிளைவிளம்புவாயே ....*
என்றுசொல்லத்தமிழறிவாள் பொருள்சொ
ன்ன] (கவி)

செந்திருக்கும்பூச்சூடிக்கனுமேந்தி ...*
திருக்காத்திலேபாறுமொருமழுவுமேந்தி *
விந்தைதனையிடப்பாகந்தனிலேவைத்த ...*
விமலராதிதிருமகனார்விப்பரத்தோடு ...*
கந்தருக்குமூன்பிறந்தகங்கைமைந்தன் ...*
கடகரிபாம்விகடதடக்கமலபாதன் ...*
தந்திமுகனேனும்பெருச்சாளியென்றே ...*
தாரணியிலவர்குலங்கள்சாற்றலாமே ...*

என்றுதமிழறிவாள்சொல்லப்பின்னும்நற்
கீரர்சொன்ன. (கவி,)

வீரமுட்டுடனேத்துமுடையார்சால ...*
விடையிலுந்தேறுவார்சிவனாலல்லர் ...*
பாருலகிற்புலிக்குருக்குமூதவியாவார் ..*
பண்பானபூமுடியார்பாவையல்லர் ...*
தாரணியிலவரவர்தந்தொழில்செய்விப்பார் *
சலக்கலீதிறடுக்கையமேளார்மறையோரல்லர் *
சீருலகிலிவர்யாரோதெரிந்துகொண்டு *
செயிழைநீயிப்பொருளைச்செப்பிடாயே-

என்றுசொல்லத்தமிழறிவாள்பொருள்சொ
ன்ன] (கவி)

கருதமீர்கள்படைநடுங்கவசுரர்மாளக் ...*
கடகமுன்டப்பல்லைத்துரக்கரிதேர்மாளப் ...*

பரிதியொளியாமினியகம்பத்தானும் ... *
பாலருமெம்மையுமாக்கர்புலருங்வீழ ... *
மருவலரைச்சிரமறுத்ததிகிரிவேந்தன் ... *
மால்தமக்குமருகனென்னும்வள்ளியங்கன் *
செருவில்வருமசுரர்குலகாலனெங்கள் ... *
செந்திவிடிவேலரதுசேவலாமே *

என்றுதமிழறிவாள்சொல்லப் பின்னும்நற்
கீரர்சொன்ன (கவி)

தம்பியுண்ணும்பூமலருங்காயுமுண்டு ... *
சோறுமுண்ணார்பசிய திவயிறுமுண்டு ... *
வெம்பியம்தார்பழம்பழுக்குமெடுப்பார்தின்
னார்-வீடுமுண்டுசம்பதனுல்மேய்ந்ததல்ல *
நம்பியதோரவரவர்நம்பமாட்டார் ... *
நல்லநல்லநிலறமுடையார்நளினகாமன் ... *
அம்புசெறிக்கும்பழுலைமாதேகேளா ... *
யாராய்ந்தேயிப்பியனையறைந்திடாயோ *

என்றுசொல்லத்தமிழறிவாள்பொருள்சொ
ன்ன (கவி.)

வண்ணமொருமச்சவிகிந்திருமணியேகூறய் *
பரிமளகெந்தயுந்திகிப்படைகையோட்டு *
தன்னியங்கண்டபிறமணியும்கடுவிச்சாரச் ... *
சுத்தலராஜன்னுமித்தவர்கலியையாமேல ... *
அன்னவர்கள்குலத்தில்வருங்குந்திதேவி *
யருள்புதல்வர்கந்தரிபனித்தருதேயன் ... *
வெள்ளைதிரிசபர்த்தல லுமையவர்கூடத் *

சூதாடித்தோர்த்ததுவுஞ் சொற்கட்டானே *
என்றுதமிழறிவாள்சொல்லப்பின்னும்நற்
கீரர்சொன்ன (கவி.)
சிற்றாடையுடுத்திருக்குஞ் சிறுமியல்ல *
சிறந்தநன்னூலணிந்திருக்குமறையோனல்ல,
ஒத்தேமெய்க்கெண்ணெயிடும்பணிக்கனல்ல *
வொண்கழுத்தில்மணியுடைப்பாரிடபமல்ல *
சித்தாரப்புரமெரித்தார்முன்னேநிற்பார் *
சிறந்தபணிவிடைக்குதவாத்தீயரல்லர் *
பொற்பாதம்பூண்டிருக்குந்திருமாலல்லப் *
பூவையேயிக்கதையைப்புகலுவாயே *
என்றுசொல்லத்தமிழறிவாள்பொருள்சொ
ன்ன] (கவி)
மந்தாரம்பிச்சிமுல்லையறுகுகங்கை *
மதியுடனேகொன்றைதும்பைமலருஞ்சூடி
யெந்தாயம்பிகையானையிட்டிலேந்து *
மீசரதுதிருக்கோயில்முன்னேநிற்கும் *
கொந்தாருமலரணையணிந்துகொண்டு *
குவலயமென்திருவிழாக்கொள்ளுங்கண்டீர் *
இத்தனைகாரியமுமறிந்தகோவே *
கரியகொடிக்கம்பமென்றேயறைவாயே *
என்றுதமிழறிவாள்சொல்லவீரகுதல்பனு
னற்கீரர்இத்தப்பிரசங்கத்திலேபொழுது
விடிந்துபோகுமென்றெண்ணிக்கொண்டு அ
ந்தமிழறிவாளைப்பார்த்துச்சொன்ன,

தமிழறியும்பெருமாளைத், அ

(வெண்பா)

ஆய்ந்தசயனத்திலாயிழையையன்றியே *
பேர்ந்தனுனிக்கிடக்கப்போகுமோ-வாய்ந்த
சீர்-முன்னாண்முலையுமுழுமதியுமன்றியே x
யெலனுக்குமென்செட்வேன்யான் *

என்றுவிறகுதலையனான நற்கிரர்சொல்லக் கேட்டுதமிழறிவாளுக்கு மன்மதவிகாரமுண் டாகி திரையைவாங்கிப்போட்டு விறகுதலைய லைப்பார்த்தாள் பார்த்தபோது அந்தவிறகுத லையனான நற்கிரர்பின்னுந் தமிழறிவாளைப்பா ர்த்துச்சொல்லிய (வெண்பா.)

என்னைவிறகுத்தலையனென்னவேயிகழ்ந்தாய் *
மின்னிடையும்பெற்றதொரு மெல்லிநல்லா
ய்மன்னவர்கள்,தோராவழகுடையான்றோளி
ன்மேலாயணைந்து சேராதவாறுதனைச்செப்பு

என்றுநற்கீரர்சொல்லக்கேட்டுத்தமிழறியு ம்-பெருமாள் அதிகசந்தோஷமாய்மன்மதவி காரம்பொறுக்கப்போகாமலெழுந்திருந்துவ ந்துசன்னலைக்கூடச்சொல்லி விறகுதலையனான நற்கீரந்தவனைக்கட்டிக்கொண்டுசொன்ன,

(வெண்பா.)

கையிறுகக்காமநெறியுருகக்காதலுடன் .. *
மெய்யுருகக்கண்டம்விழிபருக-மொய்குழலா
ள்பாகுஞ்சுவையும்பசுந்தேன்முப்பழம்போ
லாகுமுறவேயென்றளந்து ... ...*

அவ [illegible] பெருமாளகளை.

இப்படிசொல்லிக்கட்டிக் கொண்டவுடனே
நற்கிரமேதெவரும் விசாரயிட்டுநாம் இவளைக்க
டினசங்கிலைக்கும் பெருநது நான்குயுக
மாயிருக்கப்படிடநாம் இப்பாதிரந்தகாரியம்
பண்ணினதுமேயாகில்சங்கத்தாரும்நகைப்பா
ர்கள் ஆகாசவாணியும்பூமிதேவியும் நகைப்பா
ர்கள் உலகத்திலே அபகீர்த்தியுண்டாகும் இவை
கள் வெந்திவிறகு லேப்புறக்கல்லமேவாகட்டி வை
க்கிறதில் அன்னாபிரிதிக்கிவனை பண்ணிக்கொண்
டுபந்தாம் அப்படியிருக்கிறாம், இவளைக்கூடு
கிறதுநீசியல்லவென்றுஒடின்மனைத்திரும்
பித்ரமிழநிவாள் தம்மைக்கட்டிக் கொண்ட
கையைக்கவிபிறுலேவிடுவிக்கவேண்டுமென்
றுஎண்ணிச் சொல்லிய, *

(வெண்பா.)

ஒருவனொத்தியாபூரிலியூர்புக் *
கிருவர்க்கிருவரையும்பெறநீருங், இருவரிலே *
ழுமத்தாலேன்கொள்ளுறுவப்பிலகைவாகர்தீயிட்டா
ன் — சாலைக்கு [illegible] *

என்றுசொன்னவன் திருமத்திலேதயிநறுலா
ள்கட்டிக்கொண்டிருந்ததையைவிட்டுகட்டிலே
விட்டுநங்குஅம்பாற்விலேபாய்ச்சுற்றிநும்மனி
நீரிநுநதுதுப்பியில்விதிநிலையயித்துக்கொண்
டுஅந்தவிசாரிக்குப்பனிநீரைத்தெளித்து நற்
கிரருக்குதிர்மாதிரிநாளிசிறிக்கொண்டு [illegible]

சொன்ன கவிக்குப்பொருள் சொன்னவிபரம்
ஒருவனொருத்தியாவது சூரியனுக்கு ரதசாரதி
யாகிய அருணனென்பவன் ஒருநாளையவேளை
யிலே சூரியனைப்பார்த்து நான்தேவலோகம்
பார்த்துவருகிறனென்று சூரியனிடத்திலே
அப்பனைவாங்கிக்கொண்டுதேவலோகத்துக்கு
ப்போகிறபோது ஒருபெண்வடிவாய்வேஷங்
கொண்டுதேவலோகம்போய்த்தேவேந்திரன்
முப்பத்துமுக்கோடிதேவர்கள் நாற்பத்தெ
ண்ணாயிரம்ரிஷிகள்படைசூழ மேனகை- ரம்
பை ஊர்வசிதிலோத்தமையென்றுசொல்ல
ப்பட்டதேவகன்னிகள் நடனஞ்செய்யக்கொ
லுவாயிருக்கிறதேவேந்திரன்சபைக்கு இந்த
ப்பெண்ணான அருணன்போனான் அப்போ
து இந்தப்பெண்ணைக்கண்டு தேவேந்திரன்
மோகித்துக்கூடினான் அந்நேரமே ஒருபிள்ளை
பிறந்தது, அந்தப்பிள்ளையெடுத்துக்கொ
ண்டுதிரும்பவும் அருணன்சூரியனிடத்திற்கு
வந்தான், சூரியன் அவனைப்பார்த்து இந்தப்பி
ள்ளையுனக்கேதென்றான் நான் ஸ்திரீவேஷங்
கொண்டு தெய்வலோகத்தில் தேவேந்திரனு
டையசபைக்குப்போயிருந்தேன் அந்தத்தே
வேந்திரன் என்னைக்கண்டுமோகித்துக்கூடினா
ன் அப்போதுபிறந்த இந்தப்பிள்ளையென்று
சொன்னான். அந்தவிசேஷங்கேட்டுசூரியன் அ

ருணனைப்பார்த்து அந்தரூபத்தைநான் பார்க்
கவேண்டுமென்றான் நல்லதென்றுசொல்லிபூ
னெடுத்திருந்தஸ்திரீரூபத்தையெடுத்தான் அ
துகண்டுசூரியனுமோகித்துக்கூடினன் அப்
போதுமொருபிள்ளை பிறந்தது அந்தஇரண்டு
பிள்ளைகளில்மூத்தபிள்ளைவாலியைக்கொன்
றவர்இராமர் இராமருக்குப்பகையாளி-இராவ
ணன்,இராவணனாகிய இலங்கை இலங்கைப்ப
ட்டணத்தைத்தீயிட்டவன் அனுமார், அந்தஅ
னுமாருக்குத்தகப்பன்வாய்வு அந்தவாயுவரு
கிறதுகாற்று, நான்கட்டிக்கொண்டதுஇறுக்க
மாயிருக்கிறதென்று அந்தக்காற்றுவராநத்தனி
லும்நில்லென்றுசொன்னீரென்று தமிழறிவா
ன்சொல்லிக்கொண்டிருக்கிறவேளையில ஒரு
செவுளிசொல்லிற்றிது அதை நற்கீரர் ஆண்டு
பார்த்துநன்றாயிருக்கிறது நாம்வந்தகாரியஞ்
செயமாகுமென்றெண்ணிக்கொண்டிருக்கிற
போதுதமிழறிவாளும் அந்தகெவுளியையா
ண்டுபாக்குமளவில்அதினக்குமரணஞ்சொ
ல்லுவதென்றறிந்துகொண்டு நற்கீரனைப்பார
த்து அந்தகெவுளியென்னசொல்லுகிறதென்
றுகேட்டாள் அதற்குநற்கீரர் இனிஒரு க்ஷணை
நேரத்திலேசாவுசொல்லுகிறதென்று சொன்
னார்-அதுகேட்டுதமிழறிவாளும்அப்படிபிரா
ப்த்தியிருந்தால்தப்புகிறதில்லை உமக்கு அந்த

கெவுளி என்னசொன்னாற்றாவென்ன நீர்சொ
ல்லுகிற கவியைச் சொல்லுமென்றாள் அது
கேட்டுநற்கீரர்சொல்லுவார் நல்லது நானொரு
கவிசொல்லுகிறேன் அந்தக்கவிக்குட்பொரு
ள்சொல்லவல்லவியோவென்றார் அதற்குத்தமி
ழறிவாளும்நீர் அத்தனைவல்லவரோவென்றாள்
ஆனாலென்னநான்தோற்றேனேயாகில என்
குடுமியும்,பூணூலுமறுத்துப்போட்டு உன்வீ
ட்டிலேவெள்ளாட்டிப்பையலாயிருந்துகொ
ண்டுஉனக்குஏவல்பணிவிடைசெய்கிறேன் நீ
தோற்றால் அதற்கென்னசொல்லுகிறாயென்
றுகேட்க,நான்தோற்றதேயுண்டானால் என்அ
ரண்மனையுமிடிப்பித்துத் தமிழறிவாளென்கி
றபேரையுமாற்றிப்போட்டு எந்தலையையுஞ்
சிரைப்பித்துக் கழுதையின்மேலேற்றி ஊர்
கோலங்காட்டிப்போட்டிவிடுமென்றாள் அதற்
குநற்கீரர்சொன்னது நீதோற்றதேயுண்டானா
ல்எனக்குஇஷ்டமானவள்ளவனோ எந்தநீச்ச
னுக்காகிலும் உன்னைக்கட்டிவைப்பேனென்
றார் நல்லது அப்படியேஆகட்டுமென்றாள் அ
ப்போதுநற்கீரதேவர் இலக்கணகாரியங்களினா
லேவெல்லக்கூடாதென்றுநினைத்து நாடவருகி
றபோது காட்டுவழியிற்கண்டவதை ஒருவெண்

...ழறியும்பெருமாளைக்கண்டு.

பாவாகப்பிணைத்துக்கொண்டு கண்டசுத்தியா
கச்சொன்ன

(வெண்பா)

நச்சுத்தேரோடிநடுக்காட்டில்வேடுவிச்சி ... *
பச்சைக்கொடியாடநின்றாளே- யிச்சித்தே
ம்மேலவனங்கவிர்ந்தாமின்கொண்டுபோகின்
றா,மூலபலன்கண்டாய்மொழி .... *

என்றுசொன்னமாத்திரத்திலேஇந்தக்கவியைக்கேட்டுத்தமிழறிவ ளுந்தான்கற்றபஞ்சலக்ஷணத்திலும்மற்றுமுண்டான நூல்வழியெல்லாம்ஆராய்ந்துபார்த்து ஒன்றுந்தெரியாதபடியினாலேவிசாரப்பட்டுஇத்தனைகாலந்தமிழறியும்பெருமாளென்றும்பேர்பெற்று யாருமெதிரில்லாமல்கீர்த்திபடைத்திருந்தோம் இந்தவெண்பாவுக்குப் பொருள்தெரியாமற்போச்சுதென்றால் தமிழறியும்பெருமாள்தோற்றாளென்றுஉலகத்திலே யிகழ்ச்சியாகச்சொல்லிக்கொள்ளுவார்களேயென்று வெகு கிலேசத்துடனேநக்கீரனைப்பார்த்துத் தனக்கு ஒன்றுந்தெரியாதபடியினாலே மொத்தார்த்தமாகச்சொன்ன

(வெண்பா.)

உண்டிகொடுத்தார்க் குயிர்கொடுத்த ரொன்று
றி,வண்டார்குழலாள்மகிழ்வன்றி உள்ள- *

உண்டாருஞ்செத்தாருமுண்டிருந்தாருண்டீர் ௪.
உண்டார்நரகம்புகார் ... ... *

என்றுசொல்லிக்காண்பித்து நிலைக்கண்ணாடியையுடைத்து, அந்தவோட்டினால் தனது வயிற்றைப்பிளிக்கொண்டுஜீவனைவிட்டாள் பொழுதுவிடிந்ததுநற்கீரதேவருந்தமிழறிவாளனைழடிவைத்து அவள்போகிற கள்ளவழியைக்கண்டுபிடித்து அந்தவழிபாகப்புறப்பட்டுப்போய் விறகுதலையனிடத்திற்கு வந்து தம்முடைய வேஷத்தைநீக்கிப்பிச்சைவடம் வேஷ்டிதலைப்பாகைகட்டிக்கொண்டுகடுக்கன் மோதிரமிட்டுக்கொண்டு விறகுதலையனை எப்போதையும் போலே விறகுதலையனுக்குண்டான வேஷம் போட்டு அங்கேயிருக்கச்சொல்லி தற்கீரர்பாதக்குறடுகெக்கிக்கொண்டுகையிலே பொற்பிரம்புபிடித்துக்கொண்டு நடந்துபோய்ச்சோழராஜனைக்கண்டு அட்சதைகொடுத்து ஆசீர்வாதம்பண்ணி அந்தச்சோழராஜன் இருக்கச்சொன்னவிடத்திலேயிருந்தார் இப்பால்மாகதவழிவிட்டவள் இராத்திரிகள்விறகுதலையனைக்குத்ப்போனவள் இன்னம் எழுந்திருந்துவா இல்லையென்றுதன் தோழிமாருந்தானுமாக அந்தம்பணிகைவீட்டுக்குப்போய்ப் பார்க்கிறபொழுது யரிழுதுககட்டெற்துகண்டு அ

[illegible]

மெத்த அலறிவிழுந்து எழுந்திருந்திப்படி க்கொத்தமகளை எந்தப்பிறப்பிலேகாணப்போகிறேனென்று வெகு துக்கத்துடனே தன்மகளைப்பார்த்துச் சொன்ன.

(வெண்பா)

நற்கீரர்சொற்கவிக்கு நாடவிடமன்றியே ...*
பொற்கொடியாட்குத்திறந்தன் போராமல்-கி
ர்திடையாள், கண்ணுடைய லுயிரைப் போக்கி
னாள்காரிகையும், பண்ணுள்தமிழறிஞாள்பார்*

என்றுசொல்லிமரகதவடிவியுந்தோழிமாருங்கற்றுச்சொல்லிப்பெண்கள் மற்றுமுண்டானபேரனைவரும்புறப்பட்டுகூச்சலிட்டுக்கொண்டுபோய்ச் சோழராஜாவின் முன்னேவந்து முறையிட்டார்களப்போது சோழராஜனும் வியாகுலப்பட்டுமரகதவடிவியை யழைத்து வந்தவனார்போனவனார் நடந்தவிபரமெப்படியென்றுகேட்க, மரகதவடிவிசொல்லுவாள்சுவாமீ ஆரோதெரியாது வெட்டியான்போலவேயிருந்தது அந்தவேளையிலொருகாட்டுவாழைத்தண்டைத்தனதுகலைமேலே வைத்துக்கொண்டு விறகுவிலைகூறி கலிசொல்லிக்கொண்டு வந்தான் அவன் இராத்திரியெல்லாம் மகளுடனேபிரதிவாதித்துக்கொண்டிருந்தான் நாங்களுச்சிறிதுநேரம் விழித்துக்கொண்டிருந்

தோம்பிற் பாடுவாரவர்கள் அங்கங்கேயெடுத்து
க்கொண்டுநித்திரைபோம்போதும் பிற்பாடுமென்
று நடந்ததோ எது நடந்ததோ அவன்சொன்ன
கவிக்குப்பொருள் தெரியாமற்றான் போச்சு
தோ ஏதொன்றுங்காணக்கூடாதுமாண்டுபோ
னானென்றுசொன்னாள் அதுகேட்டுச்சோழரா
ஜன் மிகவும்விசனப்பட்டுச்சொல்லுவான் முன்
னேநங்களுடையவங்கிஷத்திலே ஒருபசுவுக்
காகத்தன்னுயிரையீந்ததும் ஒருமாயக்கன்
றுக்காகக்குமாரனைவண்டியிலரைத்ததுமாகஇ
ப்படியிருக்கப்பட்ட சோழன்வமிசத்திலே இ
ப்படிக்கொற்ற பழிவந்தால் நானேதுசெய்
வேனென்றுமிகவுஞ்சிந்தையில்வியாகுலமா
ய் அந்தசபையைப்பார்த்துச் சோழராஜன்
சொன்ன,

(வெண்பா.)

முற்பழிக்கொன்றுருண்டோமாயன்றரூரறைவரு
வர், கற்பத்தேனூர்ந்தபழிக்காகாதே, சொற்பக
ரு-மைப்பழிக்குங்கூந்தல் வளமுலையாள்தன்
னுடைய-விற்பழிக்குமென்செய்வேன்யான்

என்றுசோழராஜன்சொல்லிப் பின்னையும்
விசாரிக்குமளவில் அந்தச்சபையைப்பார்த்
துமரகதவடிவியானவள் அந்தச்சபையிலிரு
க்கிறநற்கீரனைக்கண்டு அவர்வசனிக்கப்பட்ட

[illegible]

வசனத்தைப் பூராயமாசக்கேட்டு நிதானித்து இ
ராத்திரிவந்து பிரசங்கம்பண்ணினவன் இவனே
யென்றறிந்துகொண்டு சோழராஜனைப்பார்
த்து மரகதவடிவி சொன்ன ..... *

(வெண்பா.)

கையாற்கொண்டையன்கதலி விறகுவிற்பான் *
பொய்யானுமன்று பொருள்காண்பான்
மெய்யாக மையாரும் வேற்கண்மடமானே மன்
னவனே - ஐயாகேம்கொன்றாரவர் *

என்று சொல்லக்கேட்டு நற்கிரதேவர் சோ
ழராஜனைப்பார்த்துச்சொன்ன ... ... *

(வெண்பா)

பொய்யானுரைத்தபிழிக் பொற்கொடிக்குச்சூ
ழ்ந்தகொலை, கெய்யமதுமாலை கொற்றவனே
மெய்யாக. மையாரும்வேற் கண்மடமானைம
ன்னவனே. கையாரக்கொலவிலொங்காண் *

என்று சொல்லக்கேட்டு சோழராஜனும் நற
கிரனைப்பார்த்து நீயாரென்று கேட்க, அதற்கு
நற்கிரனுஞ்சோழராஜனைப்பார்த்துச் சொன்
ன், (வெண்பா)

நாலாயிரத்துத்தொளாயிரமாஞ்சங்கத்தின் *
மேலானதுஇகிர் செம்பியர்தாஙவேலால் ... *
உலைந்தபுறாவுக்காகவுன்சதைத்தையேரா ... *
டலைத்தறிந்தவ்வெளியாம் ... ... *

இப்படிச்சொன்ன நற்கிரரைப்பார்த்துச்
சோழராஜன்சொன்ன, ... *

(வெண்பா-

உறவற்றூர்போலிவ்வுறையூர்க்குட்புக்கிப் .. x
பொலறையுறைசாணும்பூகலத்தி, லறையும் *
நறைகமழுநற்கிரராணுக்காலுந்த ... ... *
விறகுவிற்பதேனோவிளம்பு .. .. *

என்றுசொன்னசோழராஜனைப் பார்த்துந
ற்கீரர்சொன்ன ... *

(வெண்பா)

கூறுவார்கூறும்பரிசேகுறைவறியாள் ... *
வீறுமென்னென்றுவிடவறியாள் மாதுயனே
எசுவாரோச்சும்எளிதாகுமன்றியில்லை ... *
விசுவாசம்வாங்கதென்மின் ... *

என்றுநற்கிரர்சொல்ல இராஜாவினுடைய
மந்திரிநற்கீரரைப்பார்த்துச்சொன்ன. ... *

(வெண்பா)

பூவேகிலப்பறிப்பார்பூனேசிலபடுவர் ... *
பாவேயடிதல்லையின்பன்பாருஞ் சாவே *
மதுகரங்கள்வண்டுண்ணும்மாவெவடுவாம் *
இதுதவிரவுண்டோவியம்பு ... ... *

இப்படிமந்திரிசொல்லவே நற்கிரதேவருக்கு
மகாகோபம்வந்து இவனேநம்மையபார்த்து
ச்சொல்லுகிறவனென்று அப்போது சோழ

ராஜனுக்கும் அற்புத வாயுவுண்டு அந்தவாயு
வைமந்திரவுச்சாடனம்பண்ணி அந்தயந்
திரிபேரிலேவுதிக்கவிட்டார் அதுகண்டு யந்
திரியும்வெட்கித்தலையிறங்கிக்கொண்டான் அ
தைச்சோழராஜன் பார்த்துப் பயந்தெழுந்தி
ருந்து நற்கிரனை அங்கீகரித்து உம்முடையமகி
மையைப்பார்க்கத்தக்கனபேர்யாவரென்றுந
ற்கிரனைத்தழுவிக்கொண்டு, நல்லவார்த்தைக
ளைச்சொல்லித்தேவரீர் அனுக்கிரகத்தினாலேத
மிழறிவாளையெழுப்பிஇரட்சிக்கவேண்டுமெ
ன்றுவிண்ணப்பம்பண்ணிக்கொண்டான் அப்
போதுநற்கிரர்சந்தோஷப்பட்டு அவளையெ
டுத்துவரச்சொல்லென்றார் அப்படியேபோ
ய்த்தமிழறிவாளைஎடுத்து ஒரு கட்டிலின்மே
ரிலே போட்டுக்கொண்டுவந்து நற்கிரர்முன்
னேவைத்தார்கள்-பட்டணத்திலுண்டான சக
லஜனங்களும்வந்து புதுமையாகப்பார்த்துக்
கொண்டிருக்கிற சபையத்திலே நற்கிரதேவ
ருந் தமது கமண்டலத்தில் ஜலங்கொண்டுவ
ந்து அபிமந்திரித்துத் தமிழறிவாள்பேரிலே
யிறைத்துச்சொன்ன, ... *

(வெண்பா)

வீறுயிவளுக்குப்பிக்கோரும்வேந்தனுக்குப் ×
மாறுநாடவர்த்தவாறறியக் கூறுய் .... *

விழுந்தநிலை முள்ளடங்கி வெள்ளெலும்பு
மொன்று, மெழுந்திருக்கவேண்டுமினி *
என்றுசொன்னவுடனே வயிறுபீறுண்டுச்சரி
ந்துவிழுந்திருந்த நிலைமனைத்துமுள்ளடங்கி
வொன்றிப்பொருந்தி நித்திரைகொண்டிருந்
துநீங்கினவள்போலத்தமிழறிவாள் விழித்து
ப்பார்த்துஅந்தகவிக்குப்பயன்சொல்லிக்கொ
ண்டெழுந்திருந்தாள் பயன்சொன்னவிபரம்
பாரைபாரையென்றெழுந்திருந்தாள், அதற்கு
நக்கீரதேவர்சொன்னவிபரம்-பூரை பூரையெ
ன்றார், அதன்பிறகு அந்தச்சபையைப்பார்த்
து வெட்கித் தலையிறங்கிக்கொண்டு நின்றாள்,
நின்றவளைப்பார்த்துநக்கீரதேவர்சொன்ன,-

(வெண்பா.)

சிறந்ததமிழின்றிறமறிபமாட்டா ... *
திறந்தனையோவுந்தனைக்கொன்றோமோ - அ
றந்த, செந்தமிழாஞ்சோழனுக்குச் சேரவந்
துநின்றுதொழுஞ் - சொந்தமூன்றுச்சியுடன்
சொல்.

என்றுநக்கீரதேவர் சொல்லத் தமிழறிவா
ள்சோழராஜனைப்பார்த்துச்சொன்ன, ...

அ ... தருப்பயம்பெருமாளுரைத்தது.

(வெண்பா)

நாளேறப்பழி படைத்தேன் நாடாதென்னுவயா
யால். தேளூர்கமலத்திலைசமுகனுர்- தானே *
தலையோட்டினுள்ளபடி தப்புமோசொல்வீர்-
கலைக்கோட்டுமாமுனியேகாண் ... *

என்றுதமிழறிவாள்சொல்லச் சோழராஜன் அந்தவசனத்தைக்கேட்டுச்சந்தோஷிக்கத்திரும்பவுந்தமிழறிவாள் சொல்லுவாள் தமிழுக்கு அகஸ்தியன்வடமொழிக்குப்புலத்தியனும்இவர்களுடையகல்வியைஅறியும்போதுஎன்னையொழிய மற்றொருமில்லை யென்றிருக்கவேண்டாம்கல்வியதிகங்கண்டு பிரமனவர்சரஸ்வதியைநாவிலேதரித்துக்கொண்டார் விஷ்ணுவானவர் மார்பிலேதரித்துக்கொண்டார்ஈஸ்பரன திசங்கத்தின் கீழிருக்கிறாள் என்றுசொல்ல சோழராஜன் சந்தோஷிப்பட்டுத்தமிழறியும் பெருமாளைக்கையைப்பிடித்துக்கொண்டு நற்கீரர்கையிலேகொடுத்து இவளைநான்பெற்ற பெண்ணாகவளர்த்தேன் இந்தப்பெண்ணைத்தேவரீர்கலியாணம்பண்ணிக்கொள்ளும் உமக்கு வேண்டியராச்சியமும்விட்டுச் சிறிது திசவியமும்கொடுக்கிறேன் என்றுசொன்னான். அந்த விசேஷங்கேட்டு நற்கீரதேவர்சோழராஜனைப்பார்த்துச்சொன்ன

(வெண்பா.)

ஆரூர்கடமையெடவுடனேகொண்டுமிக... ❋
வீறுயுவகாளும்வெந்தனை,கூறு...... ❋
யெனக்கிவளுமேமகள்காணென்றன்மருகன்
றனக்குரியாளாவளினிதான் ...... ❋

என்றுசொல்லக்கேட்டுச்சோழராஜன்என்னே யாமகளென்கிறீர்அப்படிச்சொல்லவேண்டாம்இவளைக் கலியாணம்பண்ணிக்கொள்ளுமென்ன அதற்குநற்கீரர்சொல்லுவார்இப்போது செத்தவளைத் திரும்பவும் நாமெழுப்பினோமேஆனபடியினாலே நமக்குமகளல்லவோ இதுவுமல்லாமல் நம்முடையமருமகன் ஒருவையலிருக்கிறான்அவனுக்குஇவளைக்கட்டிவைக்கவேண்டுமென்றுவெகுபிரயாசைப்பட்டுஇராத்திரியெல்லாமிவளுடனேதர்க்கித்தோமென்றார்-அதுகேட்டுச்சோழராஜன்சந்தோஷிப்பட்டுத்தேவரீர்மருமகனுக்குக்கொடுக்க நாங்களெத்தனைபுண்ணியம்பண்ணினோம் அப்படி மெயமருமகனை யழைப்பியுமையாவென்றான், அதுகேட்டுநற்கீரரவர் அங்கேயிருந்தபடியேதானே அடாவிறகுதலையா இங்கேவாடா என்றுகூப்பிட்டவுடனேஅந்தவிசேஷங்கேட்டுவிறகுதலையன்பாசிப்பல்லும்பூசாமுகமும் வெற்றவீட்டுக்கழிமரம்போலகாலுங்கையும்

அறையிற்சுற்றிக்கொடியும் அதிலேசொருகி
யஅரிவாளும் இவ்விதமானகோலத்துடனேவ
ந்துநின்றான்-அப்போதுதமிழறிவாளும்பார்
த்துமுன்னாலேநாம் இவனைக்கலைத்துத்தெருவிற்
கண்டுகாறியுமிழ்ந்தோமே அவன்தான்வந்தா
ன் என்ன அதிசயமென்றுவெட்கித்தலையிறங்கி
க்கொண்டுவெகுவாய்மனதுசஞ்சலமாயிருந்
தாள்சோழராஜனுங்கண்டுமிகவும்வியாகுலத்
துடனேநற்கீரதேவரைப்பார்த்துச் சுவாமீஇ
வளிருந்தயிருப்பும் இவள்நடக்கையும் வெகு
பிரகாசமாய்க்கீர்த்திபடைத்திருந்ததும் இரா
ச்சியமுழுதும் அறியுமே அப்படிக்கொற்றவ
ளையிப்படிக்கொற்றவனுக்குக்கட்டிவிக்கின்ற
மென்றால் அதற்கு நான்சொல்லப்போகிற
தென்னவிருக்கிறது தேவரீர் சித்தத்திற்குச்சரி
யானபடிசெய்துக்கொள்ளுங்களென்றான்; அ
ப்போதுதமிழறியும்பெருமாளும் நற்கீரதே
வர்பாதத்திலேசாஷ்டாங்கமாகத்தண்டனிட்
டுகைகட்டிநின்றுக்கொண்டுசொன்ன

(வெண்பா.)

பாதம்பணிந்தேன்பழையதமிழ்முனிவே
போதுபதியேனினியுரையேன்; பேதையேன் *
செய்தபிழைபொறுத்துத்திருவுளத்துக்கேற்
றபடி-மெட்டுவித்துக்கொள்ளுமினி..... *

என்றுசொல்லிச்சிந்தைகவியாகுலமாய்நொ
ந்துகொண்டிருக்குந் தமிழறிவாளையுஞ்சோ
ழராஜனையும்பார்த்து நக்கீரதேவர்முன்பிறப்
புஉணராத்தியவிபரங்களுஞ்சோழராஜாவே
முன்ஜென்மத்திலே இந்தத்தமிழறிவள்இரா
ஜசமாரத்திஇந்தவிறகுதலையனும் இராஜகு
மாரன் இவர்களிரண்டுபேரும்இச்சையானது
ஞ்சாவிடியிலேஇவனையிருக்கச்சொல்லி ஓலை
யெழுதிப்போட்டதும், அங்கேகபடுவந்து இ
ரண்டுபேருஞ்சீவனைப்போக்கிகொண்டு ஆ
வேசமாயிருந்ததும்ஔவையார்கையில்வரம்
பெற்றதும்பிற்பாடுஇவள்வந்துமாகதவடிவி
வயிற்றிலேபிறந்துதமிழறிவாளானதும் ராஜ
குமாரன்போய்விறகுதலையன்வயிற்றிலேபிற
ந்ததும் புருவம் இவளுக்குப் பிராயசிருஷ்டி
ப்பஐம்பதுவயது அதிலேபன்னிரண்டுவயது
கன்னிகையாயிருந்ததும்ஒருவருஷம்ஆவேச
மாயிருந்ததும் அப்பால்இப்போது இருபத்
தைந்துவயது கன்னிகழியாமலிருந்ததும்- இ
ந்தப்பிறப்பிலே அந்தபன்னிரண்டுவருஷமு
ம்அந்தஇராஜகுமாரனுடனே கூடிவாழத்தக்
கதாக நக்கீரர்வந்து ஒருஇராத்திரியெல்லாம்
இவளுடனேதர்க்கப்பிரசங்கம்பண்ணி தெரி
ப்பாரென்றுஔவையார்சொல்லிப்போனது

[illegible]

இவைகளையெல்லாம் ஆதியோடந்தமாய்த் தெ
ரியத்தக்கதாகமுதற்பிறப்புணர்த்திச்சொல்லி
க்காண்பித்து அப்போது ஔவையாரென்பே
ணாக்குறித்துச்சொல்லிப்போனபடியிருந்தே
நாம்வந்துசெயித்தோமென்றார் அப்போது
சோழராஜனுந்தமிழறிவாளும்மரகதவடிவியு
ம்நக்கீரனாநமஸ்கரித்து தேவரீர்சித்தத்திற்கு
ச்சரியானபடி செய்துக்கொள்ளுமென்றார்க
ள் அப்போது நக்கீரதேவருந்தமிழறிவாளைப்
பார்த்துச்சொன்ன,

(வெண்பா)

ஊருமுறையுமோ ஒண்டொடியாங் கன்னிகை
நின், பெருந்தமிழறிவாள்போமே-நேரா*
மனைவிரும்புவானையுந்தெய்வந்தந்த ......*
புனையிடத்திற்போயிருந்துவாழ் ....*

என்று சொல்லிகாண்பித்து அந்நேரமேய
ச்சைப்பத்தல்போடுவித்து நல்லமுகூர்த்தவே
ளையில் அந்தவிறகுதலையனுக்குத்தமிழறிவா
ளைக்கலியாணம்பண்ணிவைத்துச் சோழராஜ
னைக்கொண்டு இவர்களிருப்பதற்கு உப்பரிகை
யும் ஊருமுவிடுவித்து பூஷணவகைகளுங்கொ
டுப்பித்து நீங்களிரண்டுபேருஞ் சுகமாய்வாழ்
ந்திருந்து ஔவையார் அனுக்கிரகப்படிக்கு

சிவனுடைய பாதாரவிந்தஞ்சேரக்கடவீர் உங்
கள் அரண்மனைக்குப்போயிருந்து வாழக்கட
வீர்களென்று ஆசீர்வதித்து அனுப்புவிக்க-இவ
ர்களிரண்டுபேரும் நக்கீரதேவர்பாதத்திலே ச
ஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி அனுப்புவித்
துக்கொண்டு தங்களரண்மனைக்குப்போனார்க
ள் பிற்பாடு நக்கீரருக்குச்சோழராஜன் ஒருவரி
சை பூஷணங்கட்டுவர்க்கமுங்கொடுத்துப்பச்
சைப்பல்லக்குமிட்டு நமஸ்கரித்து நக்கீரதேவ
ரை மதுரைக்கனுப்புவித்தான்-நக்கீரதேவரும்
சோழராஜன்கையிலனுப்புவித்துக்கொண்டு
விருதுபாடிவைத்துக்கொண்டு மதுரைக்குவ
ருகிறபோது பாண்டியராஜனும்சங்கத்தாரும்
எதிர்கொண்டுவந்து சந்தோஷப்பட்டு நக்கீர
தேவரையழைத்துக்கொண்டுபோனார்கள்-நக்
கீரதேவரும் உறையூருக்குப்போய்த்தமிழறி
வானை வென்றவிபரமெல்லாம் விஸ்தாரமாக
வேதான்சொன்னார், அதுகேட்டுப்பாண்டிய
ராஜன்மகாசந்தோஷித்தையடைந்து நக்கீர
தேவருக்குவேண்டியவெகுமானங்கொடுத்தா
ன்-சங்கத்தாருஞ்சந்தோஷித்தையடைந்தார்க
ள் நக்கீரதேவருஞ்சங்கத்தாருடனேகூடிச்சங்
கப்பலகையின்மீதெழுந்தருளியிருந்தார் இப்
பால்தமிழறிவாளும்ஔவையார் அனுக்கிரகப்
படிக்குஇருபத்தைத்துவயதளவுங்கன்னிகழி

யாமலிருந்தபின்புநற்கீரதேவரருளாலவ்வுருவோத்திரமறிந்துபன்னிரண்டுவருஷமவளுக்குஞ்சகலசம்பத்தையுஞ்சவுக்கியமாய் அதிகசந்தோஷித்துடனேயனுபவித்துக்கொண்டிருந்துபிற்பாடு இருவரும் மோக்ஷத்தையடைந்தார்கள்.

தமிழறியும்பெருமாள்கதை

முற்றும்.